# திருக்கல்யாணத்தாய்

மலர் : 6 இதழ் : 2 பிப்ரவரி 2015 (தனிச்சுற்றுக்கு மட்டும்)
thirukalyanamata.com



**சிறு பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள் தடுக்க வேண்டாம்...**

# திருக்கல்யாணத் தாய்

**www. thirukalyanamatha.com** தொலைபேசி : 04639 - 261230

**kalyanamatha@gmail.com**



ஆசிரியர் & வெளியிடுபவர்

பேரருட்திரு. முனைவர். R. **ஜோசப் ரவிபாலன்**

**ஆலோசகர் குழு**

அருட்திரு. ஜாண் போஸ்கோ
அருட்திரு. சிலுவை தங்கம்
அருட்திரு. டென்சில் ராஜா
அருட்திரு. ஜோசப் ஸ்டார்லின்
அருட்திரு. ஜோசப் பாக்கியராஜா
அருட்சகோதரி. புளோரா

**ஆசிரியர் குழு**

அருட்திரு. பிரான்சிஸ் வசந்தன்
அருட் சகோதரி. மைக்கிள்
திரு. ஜெயசீலன் அந்தோணிராஜ்
திரு. அந்தோணி ஜெயராஜ்
திரு. பெலிக்ஸ் அந்தோனி
திரு. ஜோசப் ததேயூஸ் ராஜா
திருமதி. ரெவின்யூஸ் ராணி
திரு. மெசியாஸ்



**தொடர்பு முகவரி**

திருத்தல அதிபர்
திருக்கல்யாணத்தாய் திருத்தலம்
பொத்தக்காலன்விளை 628 702
தூத்துக்குடி மாவட்டம், தமிழ்நாடு
தொலைபேசி : 04639 - 261230



**விளம்பரம் செய்ய தொடர்புக்கு...**

திருத்தலக்கடை : 04639 -261330
திருத்தல அலுவலகம் : 04639 -261430


## மலரின் உள்ளே...


| | |
|---|---|
| ஆசிரியரின் அருளுரை | 1 |
| திருப்பாடல்கள் 4 | 4 |
| கொடு உனக்கு கொடுக்கப்படும் | 8 |
| நீரில் ஓர் விந்தை | 9 |
| திருச்சபை செய்திகள் | 12 |
| உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்... | 15 |
| புனித மரி பெர்னதெத் சூபிரு | 17 |
| இந்தியாவின் ஏவுகனை ஜனாதிபதி.... | 18 |
| அற்புதங்கள் சாட்சிகள்... | 19 |
| திருக்கல்யாண தாய் | 21 |
| புதுமை அமல அன்னை | 22 |
| எனது கிராமம் | 23 |
| இறை சித்தம் | 26 |
| மாதாவின் ஏழு வியாகுலங்கள் | 28 |
| வாழ்வு தரும் வார்த்தைகள் | 31 |
| விவிலிய வினா விடை | 32 |



வாங்கிவிட்டீர்களா !

**திருக்கல்யாணத்தாய் மாத இதழ்**

சந்தா செலுத்தி உறுப்பினர்களாகச் சேர்ந்து பயன் பெறுங்கள்

உங்களுக்காக ஜெபிக்கிறோம். ஆண்டு சந்தா ரூ. 100



# ஆசிரியரின் அருளுரை

இயேசுவில் அன்புக்குரியவர்களே! திருக்கல்யாணத் தாயின் அருமையான பிள்ளைகளே! பெப்ருவரி மாதத்தில் கொண்டாடப்படும் விழாக்களுள் ஒன்று நம் ஆண்டவர் இயேசுவின் தொடர்புடையது. இயேசு பிறந்த நாற்பதாம் நாள் எருசலேம் கோவிலில் காணிக்கையாக்கப்பட்ட (லூக் 2:22-23) விழாதான் அது. இயேசு ஒரு யூதக் குடும்பத்தில் பிறந்ததனால், பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டங்களை மற்ற யூதர்கள் மிகவும் கவனமுடன் கடைப்பிடித்தது போலவே அவரும், அவரது குடும்பத்தாரும் மிகுந்த அக்கறையுடனும் பிரமாணிக்கத்துடனும் கடைப்பிடித்தனர்.

“தலைப்பேறு அனைத்தையும் எனக்கு அர்ப்பணம் செய்; இஸ்ரயேல் மக்களிடையே மனிதரிலும் கால்நடைகளிலும் கருப்பையைத் திறக்கும் எல்லாத் தலைப்பேறும் எனக்குரியவை”(விப 13:2). அர்ப்பணிக்கப்பட வேண்டியது ஆண் குழந்தையா பெண் குழந்தையா என்கிற கேள்வி எழுகிறது. தலைப்பேறாகிய ஆண் குழந்தையைத்தான் கடவுளுக்கு அர்ப்பணம் செய்யவேண்டும் என்று அந்தச் சட்டம் விளக்குகிறது (விப 13:11-15; 34:19-20). எதற்காக இந்த அர்ப்பணம்? இஸ்ரயேல் மக்கள் எகிப்தின் அடிமை நிலையிலிருந்து மோசே மூலம் கடவுளால் விடுவிக்கப்பட்டபோது, எகிப்தியரின் தலைப்பேறுகளை ஆண்டவரின் தூதர் கொன்றார். ஆனால் இஸ்ரயேலர் வாழ்ந்த பகுதியில் தலைப்பேறுகள் கொல்லப்படவில்லை. மாறாக அவை கடவுளால் புனிதப்படுத்தப்பட்டு, ஆசீர்வதிக்கப்பட்டு, கடவுளுக்கு உரியவையாக மாறின. கடவுளின் இந்தச் செயலுக்கு நன்றி கூறும் விதத்திலும், கடவுளால் புனிதப்படுத்தப் பட்டவற்றை அவருக்கே அர்ப்பணிக்க வேண்டும் என்கிற எண்ணத்திலும் (எண் 3:13), இஸ்ரயேலர் தங்கள் தலைப்பேறுகளை, குறிப்பாக, ஆண் குழந்தைகளை கடவுளுக்கு அர்ப்பணித்தனர்.

இஸ்ரயேலில் குருகுலம் சரியான முறையில் அமைவதற்கு முன்பு, ஒவ்வொரு குடும்பத்திலும், மூத்த மகன்தான் குருவுக்குரிய செயலைச் செய்து வந்ததாக அறிகிறோம். ஆகவே தலைப்பேறாகப் பிறக்கும் ஆண் குழந்தையைக் கடவுளுக்கு அர்ப்பணிக்கும் முறை பழக்கத்திற்கு வந்தது என்று யூதப் போதகர்கள் (ரபிக்கள்) கூறுகின்றனர். சீனாய் பாலை நிலத்தில் எப்பொழுது இஸ்ரயேல் மக்கள் பொற்கன்றை ஆராதித்தார்களோ (விப 32), அப்பொழுது இஸ்ரயேலின் தலைப்பேறாகப் பிறந்த ஆண் குழந்தைகள் தங்களின் குருத்துவப் பொறுப்பை இழந்தனர். அதன்பின் குருத்துவத்தை நிறைவேற்றும் கடமை லேவியருக்கு, அதாவது, ஆரோனுக்கும், அவரது புதல்வர்களுக்கும் உரித்தானதொன்றாகியது (எண் 3:9, 12-13, 45-47). இதன் காரணமாக, ஒவ்வொரு தலைமகனும் மீட்கப்பட வேண்டிய நிலை வந்தது. பிறந்து ஒரு மாத காலத்தில் கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட தலைப்பேறாகிய ஆண் குழந்தை மீட்கப்பட வேண்டும் என்றும் பழைய ஏற்பாட்டுச் சட்டம் கூறுகிறது (எண் 18:15-16). எப்படி மீட்கப்பட வேண்டும்? இருபது கேரா மதிப்புடைய தூயகத்து செக்கேலில் தலைக்கு ஐந்து வெள்ளிக்காசுகளைக் குருக்களுக்குச் செலுத்தி, குழந்தையை மீட்க வேண்டும் (எண் 3:47, 18:15-16). ஒரு செக்கேலின் மதிப்பு இருபது கேராக்கள்; ஐந்து அல்லது ஆறு கேராக்கள் ஒரு தெனாரியத்திற்குச் சமம்; ஒரு தெனாரியம் என்றால் ஒரு நபரின் ஒரு நாள் கூலி (மத் 20:2); அப்படியானால், ஒரு செக்கேல் என்றால் நான்கு அல்லது மூன்றேகால்

தெனாரியங்கள்; ஐந்து செக்கேல் என்றால் ஏறக்குறைய இருபது அல்லது பதினாறு தெனாரியங்கள். கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்டத் தலைமகனை மீட்க அந்தக் குழந்தையின் தந்தை பதினாறிலிருந்து இருபது தெனாரியங்கள் வரை மீட்புத் தொகையாகக் கொடுக்க வேண்டியிருந்தது. அதாவது, ஒரு நபர் ஏறக்குறைய இருபது நாள்கள் வேலை செய்து சம்பாதிக்கும் தொகை என்றாகிறது.

ஒருவர் தன் தலைமகனை மீட்கச் செலுத்தும் தொகை எருசலேம் கோவிலுக்கு அல்ல. அந்தத் தொகை எந்தக் குருவுக்கும் கொடுக்கப்படலாம். எருசலேம் கோவிலில் அல்லது எருசலேமில்தான் அர்ப்பணிக்கப்பட்டக் குழந்தை மீட்கப்பட வேண்டும் என்றில்லை. எந்த இடத்திலும், எந்த ஊரிலும் குழந்தை மீட்கப்பட முடியும். எருசலேம் கோவில் பணியில் ஈடுபட்டக் குருக்கள் யாவரும் எருசலேம் கோவிலில் அல்லது எருசலேம் நகரில் வாழ்ந்தனர் என்று சொல்லமுடியாது. நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் குருக்கள் வாழ்ந்தனர். இருபத்து நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டிருந்த லேவியக் குருக்கள் தங்களின் முறை வந்தபோது எருசலேம் கோவிலுக்குச் சென்று பணி செய்தனர். ஒவ்வொரு குழுவும் ஒரு வாரம் பணி செய்யும் பழக்கம் இருந்தது. ஒரு குழுவுக்கு வருடத்தில் இரண்டு முறை கோவில் பணி செய்ய வாய்ப்புக் கிடைப்பதுண்டு. பணியில்லாத வேளைகளில் தங்களின் ஊர்களுக்குச் சென்று விடுவர். ஒரு நபர் தன் தலைமகனை மீட்க வரும்போது எந்த ஊரிலும், எந்தக் குருவிடமும் ஐந்து செக்கேல் செலுத்தி மீட்டுக்கொள்ளலாம். ஐந்து செக்கேலைப் பெறும் குரு அதை தனக்கென்று வைத்துக்கொள்ளலாம், விரும்பினால், அந்தப் பணத்தை அந்தக் குழந்தைக்குப் பரிசாகவும் கொடுக்கலாம். தலைமகனை மீட்கப் பயன்படுத்தும் செக்கேல் வியாபாரத்திற்குப் பயன்படுத்தும் செக்கேல் அல்ல; அது சற்று வித்தியாசமானதாகவும், பெரிதாகவும், சுத்தமான வெள்ளியால் செய்யப்பட்டதாகவும் இருக்கவேண்டும். இல்லையெனில், அது செல்லாது. இந்த வகை செக்கேல்களை குருக்களிடம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட யூத வியாபாரிகளிடம் பணம் கொடுத்து வாங்கிக்கொள்ளலாம் (காண்க. மத் 21:12; மாற் 11:15; யோவா 2:15).


அர்ப்பணிக்கப்படுகிற அனைத்துக் குழந்தைகளும் மீட்கப்பட வேண்டும் என்கிற சட்டம் இருந்தாலும், லேவியக் குழந்தைகள் அதற்கு விதிவிலக்கு. அக்குழந்தைகளை மீட்க முடியாது. மொத்தத்தில், தலைமகன்கள் கடவுளுக்கு அர்ப்பணிக்கப்படுகின்றனர் என்று சொல்வதைவிட, அவர்கள் மீட்கப்படுகின்றனர் என்று சொல்வதுதான் பொருத்தமானது. மீட்புத்தொகை லேவியக் குருவுக்குச் செலுத்த வேண்டியுள்ளது. லேவியரின் தலைப்பேறுகள் எப்பொழுதும் கடவுளுக்கு உரியவை. ஆகவே அக்குழந்தைகளை மீட்க வேண்டியதில்லை. எருசலேம் ஆலயத்தில் இயேசு அர்ப்பணிக்கப்பட்டபோது, அவர் மீட்கப்பட்டிருந்திருக்க வேண்டும். ஆனால் லூக்கா இயேசு மீட்கப்பட்டதாக எழுதவில்லை. இயேசு ஒரு லேவியக் குழந்தை அல்ல; அவர் யூதாவின் அரசக் குலத்தைச் சார்ந்தவர். தாவீதின் குடும்பத்தில் பிறந்தவர். பின் ஏன் அவர் மீட்கப் படவில்லை? பிறப்பால் இயேசு ஒரு லேவியக் குரு இல்லையென்றாலும், அவர் கடவுளுக்கு முற்றிலும்

அர்ப்பணமானவர். அந்த அடிப்படையில் ஒரு வேளை லுக்கா இயேசு மீட்கப்பட்டாரா இல்லையா என்பதைத் தெரிவிக்கவில்லை என்று நாம் எண்ணிக்கொள்ளலாம்.

இயேசு எருசலேம் ஆலயத்தில் அர்ப்பணமாக்கப்பட்ட போது சிமியோன் இயேசுவைக் குறித்து இறைவாக்குரைத்தார். இஸ்ரயேலில் பலரின் எழுச்சிக்கும், வீழ்ச்சிக்கும் இயேசு காரணமாய் இருப்பார் என்றும், எதிர்க்கப்படும் அடையாளமாய் இருப்பார் என்றும் சிமியோன் சுட்டிக்காட்டினார். மேலும் இயேசுவே பிற இனத்தவரின் இருளகற்றும் ஒளியாகத் திகழ்வார் என்பதையும் எடுத்துச் சொல்கிறார். பழைய ஏற்பாட்டில் இறைவாக்கினர் எசாயா துன்புறும் ஆண்டவரின் ஊழியர் பிற இனத்தவருக்கு ஒளியாகத் திகழ்வார் என்பதைச் சுட்டிக்காட்டுகிறார் (எசா 42:6; 49:6). எசாயா முற்காலத்தில் கண்ட கனவை இயேசு என்கிற அற்புதக் குழந்தை நிறைவாக்குவதாக சிமியோன் எடுத்துக் கூறுகிறார். பிற்காலத்தில் தம் பணி வாழ்வின் போது இயேசு "நானே உலகின் ஒளி" என்று கூறுகிறார் (யோவா 8:12; 9:5). சிமியோன் அன்னை மரியா குறித்தும் இறைவாக்குரைத்தார். அன்னையின் உள்ளத்தை ஒரு வாள் ஊடுருவும் என்கிறார். வாளா? அது என்ன? பொதுவாக ஒரு வாள் ஊடுருவும் என்று சொல்லப் படுகிறபோது, அன்னை மரியா அனுபவித்த துன்பங்கள் குறித்துதான் சிமியோன் கூறுகிறார் என்று நாம் எண்ணுகிறோம். துன்பத்தைப் பற்றித்தான் சிமியோன் சுட்டிகாட்டினார் என்கிற உண்மை ஒருபுறம் இருந்தாலும், இன்னுமோர் உண்மை இதில் அடங்கியிருக்கிறது. 'வாள்' என்றால் அது இறைவார்த்தையை உணர்த்தக் கூடியது (காண்க. எபி 4:12). இறைவார்த்தை அன்னைக்கு எப்போதும் சவால் விடுத்துக்கொண்டே இருக்கும். கடவுளிடமிருந்து அன்னை மரியா பெற்ற அழைப்பின் காரணமாக இறைவார்த்தை எப்போதும் அவர் உள்ளத்தை ஊடுருவிக்கொண்டே இருக்கும் என்றும் நாம் புரிந்துகொள்ளலாம்.

இயேசு இன்றும் எதிர்க்கப்படும் அடையாளமாய்த்தான் இருந்துகொண்டிருக்கிறார். அவரது படிப்பினையை பலர் ஏற்றுக்கொண்டாலும், இன்றுகூட இன்னும் பலர் அவரை உலக மீட்பராகவும், கடவுளாகவும் ஏற்க மறுக்கின்றனர். நம்முடைய உள்ளத்திலும்கூட இயேசுவை ஏற்பதா அல்லது மறுப்பதா என்றும், அவரது கட்டளைகளின்படி நடக்க வேண்டுமா வேண்டாமா என்றும் கேள்விகள் தொடர்ந்து எழுந்துகொண்டிருப்பதை நம்மால் உணர முடிகிறது. அதாவது, நம் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் இயேசு தொடர்ந்து எதிர்க்கப்படும் அடையாளமாய் விளங்கி வருகிறார். நம்முடைய சிந்தனையால், சொல்லால், செயலால் அவரை நாம் மறைமுகமாய் எதிர்த்துக்கொண்டுதான் இருக்கிறோம். "இயேசுவே என்றும் எப்போதும் நான் உம் பக்கம்தான்" என்று வெறுமெனே வாயளவில் சொல்லி விட்டால் போதாது. நம்முடைய ஒவ்வொரு சிந்தனையும், சொல்லும், செயலும் நாம் இயேசுவைச் சார்ந்தவர்கள் என்பதைத் தொடர்ந்து எடுத்துரைக்க வேண்டும். நம் அன்னை மரியாவைப் போல இறைவார்த்தை விடுக்கும் சவாலை எதிர்கொண்டு, இறைவனை மகிமைப் படுத்துவோம்.

– பேரருட்திரு. முனைவர். R.**ஜோசப் ரவிபாலன்**
**திருத்தல அதிபர்**
திருக்கல்யாணமாதா திருத்தலம், பொத்தக்காலன்விளை.



# திருப்பாடல் 6

பேரருட்திரு. முனைவர். R.ஜோசப் ரவிபாலன்

திருப்பாடல் ஆறு தனியாரின் புலம்பல் வகையைச் சேர்ந்தது. மேலும் மன்னிப்பு வேண்டும் ஏழு திருப்பாடல்களில் ( தி.பா 6,32,38,51,102,130,143 ) முதலாவது திருப்பாடல் இது. மரணத்தை விளைவிக்கும் கொடிய நோயிலிருந்தும், எதிரிகளிடமிருந்தும் தன்னை விடுவிக்க வேண்டும் என்றுஇத்திருப்பாடலின் ஆசிரியர் இறைவனிடம் மன்றாடுவது தெரிகிறது. இத்திருப்பாடலுக்கும், இதற்கு முன்னால் இருக்கும் திருப்பாடல்களுக்கும் இடையே மிக நெருங்கியத் தொடர்பு இருக்கிறது. எனக்கு இரங்கும் என்று இறைவனிடம் எழுப்பப்படும் வேண்டுதலை திபா 4:1லும் காணமுடிகிறது; என்னை மீட்டருளும் என்கிற மன்றாட்டு இத்திருப்பாடலிலும், 3ஆவது திருப்பாடலிலும் குறிப்பிடப்பட்டுள்ளது (திபா 6:4; 3:7) . அதைப்போலவே உமது பேரன்பு என்கிற பதம் செவி சாய்த்தல் வேண்டுதல் விண்ணப்பம் போன்ற வார்த்தைகள் இத்திருப்பாடலில் (6:8ஆ-9) குறிப்பிடப்பட்டுள்ளதுபோல, திபா 5:2-3 திபா 4:1 ஆகிய இடங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளன. இத்திருப்பாடலில் (6:10) உள்ள என் எதிரிகள் என்கிற சொல் திபா 3:7லும் காணப்படுகிறது. இத்திருப்பாடலில் இரவில் இறைவனை நோக்கி வழிபடும் நபரின் மனநிலை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது (6:6). திருப்பாடல் ஐந்து காலையில் பாடப்படுகிறது; திருப்பாடல் ஆறு இரவில் பாடக்கூடியதாக அமைக்கப்பட்டுள்ளது.இதைப்போலவே திருப்பாடல் மூன்று காலையில் பாடக்கூடியதாகவும், திருப்பாடல் நான்கு மாலையில் பாடக்கூடியதாகவும் இருக்கிறது. இவ்வாறு காலை- மாலை என்கிற வரிசைத் திருப்பாடல்கள் நூலில் நாம் காணமுடிகிறது.

ஆறாம் திருப்பாடலின் ஆசிரியர் உடல் நோயினாலும், மன நோயினாலும் அலைக்கழிக்கப்பட்ட நிலையில், இறைவனை நோக்கி மிகுந்த நம்பிக்கையுடன் மன்றாடுவதோடு, தனக்கு உடனடியாகவே உடல் நலமும், மனநலமும் வேண்டும் என்று இறைவனிடம் விண்ணப்பிக்கிறார். ஆசிரியருக்கு அவர் அனுபவிக்கும் நோய் மட்டும் துன்பம் விளைவிக்கவில்லை; அவரது எதிரிகளிடமிருந்தும் அவருக்குத் துன்பங்கள் தரப்படுகின்றன என்கிற உண்மை இத்திருப்பாடலில் வெளிப்படுகிறது (இவா 7ஆ, 8அ, 11). மனிதனை வாட்டும் உடல் நோய் மற்றும் மனநோய் குறித்தப் பழைய ஏற்பாட்டுத் தத்துவத்தை இத்திருப்பாடல் பிரதிபலிக்கிறது. அதாவது, ஒருவரை உடல் நோயோ, மனநோயோ தாக்குகிறது என்றால் அதற்கு அடிப்படைக் காரணம் அவர் இறைவனுக்கெதிராகப் புரிந்துள்ள பாவம்தான். ஒருவரின் பாவத்திற்குத் தண்டனையாக இறைவன் அவருக்கு நோயைக் கொடுக்கிறார். இத்திருப்பாடலை நாம் நான்கு பாகங்களாகப் பிரிக்கலாம்

1.புலம்பல் (இவா 1-3); 2. உடல் நலம் வேண்டி இறைவனிடம் எழுப்பப்படும் செபம் (இவா 4-5); 3. புலம்பல் (இவா 6-7); 4. நன்றி வழங்குதல் (இவா 8-10).

இத்திருப்பாடலின் ஆசிரியர் வெளிப்படுத்தும் புலம்பலில்,இறைவன் தம் கோபத்தைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும் என்கிற மன்றாட்டு அடங்கியிருக்கிறது; ஆண்டவரே, என்மீது சினங்கொண்டு என்னைக் கண்டியாதேயும்; என்மீது கடுஞ்சீற்றங்கொண்டு என்னைத் தண்டியாதேயும் (இவா 1). இறைவனின்

கோபத்திற்கு ஆளானால் என்ன நேரிடும் என்பதை தன் அனுபவத்தின் மூலம் உணர்ந்துகொண்டவராய், அதிகமான நம்பிக்கையுடன், தன் புலம்பலின் வழியாக ஆசிரியர் தன் வேண்டுதலை இறைவனிடம் சமர்ப்பிக்கிறார். தான்தளர்ந்து போனதாகவும், தன் எலும்புகள் வலுவிழந்து போனதாகவும், தன் உயிர் ஊசலாடுவதாகவும் அவர் இறைவனிடம் எடுத்துச் சொல்லி (இவா 2-3), எவ்வளவு காலம் தன்னைத் தாக்கியுள்ளத் துன்பம் நீடிக்கும் என்கிற கேள்வியையும் எழுப்புகிறார். இந்நிலை எத்தனை நாள்? (இவா3) என்கிற கேள்வி பொதுவாக புலம்பல் வகைப் பாடல்களில் எழுப்பப்படுவதை நாம் அறிகிறோம் (திபா 74:10; 80:5; 90:13). தான் பெறும் வேதனை விரைவில் தன்னைவிட்டு அகல வேண்டும் என்கிற ஆதங்கத்தினால், இந்தக் கேள்வியை ஆசிரியர் இறைவனிடம் எழுப்புகிறார். இந்தக் கேள்வியின் மூலமாக, ஆசிரியர் தன் இயலாமையையும்,இறைவன்மீது தான் சார்ந்து நிற்கின்ற நிலையையும் எண்பித்துக் காட்டுகின்றார். இறைவன் ஒருவரால் மட்டுமே தன் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கமுடியும் என்கிற எண்ணம்தான் ஆசிரியர் இந்தக் கேள்வியை எழுப்பிடத் தூண்டுகிறது. இந்தக் கேள்வி ஆசிரியரின் அவநம்பிக்கையின் காரணமாக எழுப்பப்பட்டதல்ல் மாறாக இது நம்பிக்கையைத் தெளிவாக வெளிப்படுத்தும் கேள்வி என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இத்திருப்பாடலின் இரண்டாம் பகுதியில் ஆசிரியர் இறந்தபின் உம்மை நினைப்பவர் எவருமில்லை; பாதாளத்தில் உம்மைப் போற்றுபவர் யார்? (இவா 5) என்கிற கேள்வியை எழுப்பி, தன் உயிரைக் காட்டுமாறு, இறைவனிடம் வேண்டுகிறார். ஷயோல் என்றுஎபிரேய மொழியில் அழைக்கப்படும் இறந்தோர் உலகம் உண்மையில் இருண்ட பாதாள உலகம். இதைக் குறிப்பதற்கு திருப்பாடல்களில் பல வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இருண்ட குழி, கல்லறை, இறந்தோரின் இருப்பிடம் என்றெல்லாம் இந்த இடம் அழைக்கப் படுகிறது பழைய ஏற்பாட்டுக் காலத்தின் இறுதிக்கட்டம் வரை, இஸ்ரயேலருக்கு மறுவுலகம் மற்றும் மறுவாழ்வு பற்றியத் தெளிவான கருத்து கிடையாது. ஆனால் ஒருவர் இறந்தபின் அவர் பெறப்போவது வெறும் நிழல் வாழ்க்கைதான் என்று அவர்கள் நம்பினர். அவர்களின்சிந்தனையின்படி, இவ்வுலகில் வாழ்ந்து இறந்துபோகும் ஒருவரின் உடல் அழிந்துபோய் விடும் என்றும், ஆன்மா மட்டும் பாதாள உலகிற்குள் சென்று , எந்தவித அசைவும், செயல்பாடுமின்றி அப்படியே இருக்கும் என்றும் அறியப்படுகிறது. இறந்தோர் உலகிற்குள் நுழையும் ஆன்மாக்களால் இறைவனைப் பற்றி அறிந்துகொள்ளவோ, அவரைப் புகழவோ, அவரிடம் இறப்புக்குப்பின் தன்னால் இறைவனைப் புகழமுடியாது என்பதை எடுத்துச் சொல்கிறார். அவர் இறைவனைப் புகழ வேண்டுமென்றால் உயிருடன் இருக்கவேண்டும்.இறைவன் புகழப்பட வேண்டுமென்பதற்காக, தான் இறைவனால் காப்பாற்றப்பட வேண்டுமென்பது ஆசிரியரின் மன்றாட்டு. இந்தக் கருத்து மற்ற புலம்பல் வகை திருப்பாடல்களிலும் காணப்படுகிறது (30:10; 88:11-13; 115:17; காண்க. எசா 38:18).

மூன்றாம் பகுதியில் ஒவ்வோர் இரவிலும் தான் கண்ணீர் சிந்துவதாயும், துயரத்தினால் தன் கண் வீங்கிப்போவதாகவும், தான் மிகவும் இளைத்துப் போவதாகவும் ஆசிரியர் இறைவனிடம் வேதனையில் புலம்புகிறார் (இவா 6-7). துன்பம் ஒருவரை அழுத்தும்போது, அவர் எப்படிப்பட்டவராக இருந்தாலும்நொடிந்து போய்விடுவார் (காண்க. திபா 3:10-12). இந்தப் புலம்பலின் வழியாக ஆசிரியர் தன் நிலையை இறைவனுக்கு உணர்த்தி, அவரது உதவியை ஏக்கத்தோடும், மிகுந்த எதிர்பார்ப்போடும் நாடுகின்றார். இந்தப் புலம்பல் ஒரு செபம்தான் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

நான்காம் பகுதியில், புலம்பல் திடீரென்று புகழ்ச்சியாக மாறுவதைக் காணலாம். பொதுவாக, புலம்பல் பாடல்கள் புலம்பல் என்கிற மன்றாட்டுடன் தொடங்கி, இறுதியில் இறைவனைப் புகழ்ந்து நன்றி கூறுவதுடன் நிறைவடைகின்றன. அந்த அடிப்படையில் ஆசிரியர் இறைவனுக்கு நன்றியையும், புகழ்ச்சியையும் தெரிவித்து இத்திருப்பாடலை நிறைவு செய்கிறார். ஏற்கெனவே இறைவனிடம் புலம்பி வேண்டி,அவரிடமிருந்து நன்மையைப் பெற்றத் தன் பழைய அனுபவத்தின் காரணமாக, தற்போது தான் புலம்பி இறைவனிடம் வேண்டுவதும் நிச்சயமாக தனக்கு அருளப்படும் என்று நம்பி, ஆசிரியர் இறைவனைப் புகழ்ந்து, அவருக்கு நன்றி கூறுகின்றார். அதுமட்டுமல்ல, அவர் இறைவனிடம் புலம்பி வேண்டும்போது அங்கிருக்கும் இறைவாக்கினர் அல்லது குரு இறைவன் அவரது புலம்பலைக் கேட்டு, நன்மையைச் செய்வார் என்று ஆருடம் வழங்குவார். ஆகவே தன் மன்றாட்டு உண்மையில் இறைவனால் கேட்கப்படப்போகிறது என்கிற உறுதியான நம்பிக்கையோடு, ஆசிரியர் இறைவனுக்கு நன்றி செலுத்துகின்றார். இத்திருப்பாடலின் ஆசிரியரைப்போல, இறைமக்கள் இறைவனிடம் தங்களின் தேவைகளை எடுத்துச் சொல்லும்போது, அவர் நிச்சயம் தருவார் என்கிற நம்பிக்கையில் அவருக்கு நன்றி செலுத்தினால், அது உண்மையான செபமாக வெளிப்படுகிறது.



# இறைவனுக்கே அர்ப்பணம்

இறைவனால் படைக்கப்பட்ட அனைத்துமே இறைவனுக்கு அர்ப்பணம். இறைவன் கொடுத்த மீட்பின் கனியை இறைவனுக்கே மரியா காணிக்கையாக கொடுத்தார். தூய்மை சடங்கை நிறைவேற்ற இரண்டு வெண்புறாக்களோடு எருசலேம் ஆலயத்திற்கு குழந்தையை கொண்டு சென்றனர். திருக்குடும்பமான நாங்களும், பூவுலகை சார்ந்தவர்களென, அனைவருக்கும் மகிழ்ச்சியை தந்தவர், அன்னை மரியா. இன்றுவரை காணிக்கை அன்னை என மக்களால் போற்றப்பட்டு வருகிறார்.

உமது மீட்பை என் கண்கள் கண்டு கொண்டன. லூக்.2:31 இறைபற்றுடையவரும் நேர்மையாளருமான சிமியோன் ஒருவர் இருந்தார். ஆண்டவருடைய மெசியாவை காணுமுன் சாகபோவதில்லை என உணர்த்தப்பட்டிருந்ததால் அன்று எருசலேம் ஆலயத்திற்கு வந்திருந்தார். மரியா குழந்தையுடன் கோவிலுக்குள் சென்றார். சிமியோன் அக்குழந்தையை கையிலேந்தி கடவுளைப் போற்றி பாடினார். முதன் முதலாக இயேசுவை கையிலேந்தும் பாக்கியம் சிமியோனுக்கே அமையப் பெற்றது. வயது முதிர்ந்த அன்னாவும் கண்ணால் கண்டு களி கூர்ந்தார். ஆண்டவர் நமக்கு மாபெரும் செயல்புரிந்துள்ளார். அதனால் நாம் பெருமகிழ்ச்சியுறுகிறோம் தி.பா.126:3.

- **செல்வம்மாள்,** பொற்பை.

# மரியா என்றும் கன்னியானவர்

இயேசுவின் இறைத்தன்மைக்கு அழுத்தம் கொடுத்திட,மரியாவின் கன்னித் தன்மை ஒரு மறைபொருளாகவே இருக்கிறது. மரியாவின் கன்னித் தன்மையானது மூன்று முக்கிய பிரிவுகளைக் கொண்டது:

அ. இயேசு பிறப்புக்கு முன் மரியாவின் கன்னித் தன்மை

ஆ. இயேசு பிறப்பின் போது மரியாவின் கன்னித் தன்மை

இ. இயேசு பிறப்புக்குப்பின் மரியாவின் கன்னித் தன்மை

**இயேசு பிறப்புக்குமுன் மரியாவின் கன்னித்தன்மை**

வானதூதரிடம் மரியா தான் கன்னி என்பதைப் பறைசாற்றுகிறார் (லூக்கா 1:34; மத் 1:18).

**இயேசு பிறப்பின் போது அவரது கன்னித்தன்மை**

ஆதலால் உம்மிடம் பிறக்கப்போகும் குழந்தை தூயது என வானதூதர் மரியாவின் கன்னித்தன்மையை உறுதிப்படுத்துகிறார் (லூக்கா 1:35).யூத முறைமைப்படி, குழந்தை பிறந்தவுடன் தூய்மைப்படுத்தும் சடங்கு செய்வதுண்டு (லேவி 12:5, எசே 16:6-9). ஆனால் இறையியல் கூற்றுப்படி, இயேசுவின் பிறப்பில் இரத்தத் தீட்டு எதுவுமில்லை.வார்த்தையானவரின் பிறப்பில் இரத்தம் வெளிப்படவில்லை (யோவா 1:13). கார்ல் ரானர் எனும் இறையியலார் இவ்வாறு கூறுகிறார்:ஜென்மப் பாவமின்றி உற்பவித்த, வார்த்தை மனுவுருவானவரின் தாயான மரியா, எல்லா பாவத்திலிருந்தும், பாவ நாட்டங்களிலிருந்தும் விடுபட்டிருப்பதால், அவரது குழந்தை பிறப்பின் ஒவ்வொரு அங்கமும் தனித்துவமிக்க, பிற பிறப்புகளிலிருந்து சற்று வேறுபட்ட, அருள் நிறைந்த மனித அனுபவமாகும்.

**இயேசு பிறப்புக்குப்பின் அவரது கன்னித் தன்மை**

மரியா, எருசலேமின் வாயில் என இறைவாக்கினர் எசேக்கியேல் வர்ணிக்கிறார் (44:2). ரெய்மண்ட் ப்ரௌன் பின்வருமாறு கூறுகிறார்: தூய ஆவியின் நிழல்பட்டதால், எந்த ஒரு மனிதனுக்கு தனது கன்னித்தன்மையை அர்ப்பணிக்க, மரியா முன்வரவில்லை.அந்தியோக்கியாவைச் சேர்ந்த இஞ்ஞாசியார், மறைசாட்சியான ஜஸ்டின், எரேனியூஸ்,ஆரிஜென் மற்றும் தூய எஃப்ரேம் போன்றோர் மரியாவின் கன்னித் தன்மையின் மறைபொருளை உலகிற்கு எடுத்துக்கூறிய திருச்சபைத் தந்தையர்களாவர்.



**- தாயே எங்கள் தஞ்சம்**

# கொடு உனக்கு கொடுக்கப்படும்



இளைஞன் ஒருவன் பாலைவனத்தில் மாட்டிக்கொண்டான். பாதை தெரியாமல் கால் போன போக்கில்நடந்து சென்றான். வெயில் நடுவானில் வரும் போது நாவறண்டது. தண்ணீர் எங்கேயாவது கிடைக்குமா என தேடி அலைந்தான். இறுதியாக ஒரு அடிபம்பு தென்பட்டது. ஓடி சென்று அருகில் பார்த்தபோது அதன் அருகில் ஒரு பெட்டி இருந்தது. அந்த பெட்டியின் மேல், இதனுள் ஒரு குடுவை நிறைய தண்ணீர் உள்ளது. அதை இந்த அடிபம்பில் ஊற்றி பம்பை அடித்தால் தண்ணீர் வரும் அதைக் குடித்துவிட்டு மீண்டும் இந்த குடுவை நிறைய தண்ணீர் முகர்ந்து வைக்கவும் என எழுதி இருந்தது.

இளைஞன் சற்றே சிந்தித்தான் குடுவையில் உள்ள நீரை குடிக்கவா? அல்லது பம்பில் ஊற்றி அடிக்கவா? இறுதியில் முடிவெடுத்தான் தனக்கு பின் வருபவருக்கு தண்ணீர் கொடுக்கவேண்டும் என்று எண்ணி குடுவையில் உள்ள நீரை பம்பில் ஊற்றி அடித்தான். ஆனால் தண்ணீர் சிறிது கூட வரவில்லை. மனமுடைந்து சிறிது நேரம் அமர்ந்து சிந்தித்தான். மீண்டும் எழுந்து விடாமுயற்சியுடன் பம்பை அடித்தபோது தண்ணீர் வந்தது. போதுமான அளவு தண்ணிர் அருந்திவிட்டு குடுவை நிறைய தண்ணீர் நிரப்பி பெட்டிக்குள் வைத்தான்.பெட்டியின் மேல்புறம், நீங்கள்இந்த பம்பில் நீர் கொடுங்கள் அது உங்களுக்கு நிறைய நீர் கண்டிப்பாக கொடுக்கும் என்னை நம்புங்கள் என எழுதி வைத்தான்.

இந்த இளைஞனைப்போல் நம்மில் எத்தனை பேர் இருக்கிறோம். குடுவையில் உள்ள நீரை அருந்திவிட்டு சென்றிருந்தால் அடுத்து இதைப்போல் தாகத்தோடு இருப்பவர்கள் என்ன செய்வார்கள். எந்த இக்கட்டான சூழ்நிலையில் இருந்தாலும் அடுத்தவருக்கு உதவுவதை மறக்கக்கூடாது. இதையே தான் லூக்கா 6:38-ல் கொடு உனக்கு கொடுக்கப்படும் என்று கூறியுள்ளார். பொருட்களையோ, பணத்தையோ கொடுப்பது மட்டும் உதவிகள் இல்லை. பிறர் பிரச்சனைகளுக்கு தீர்வு சொல்வதும், குடும்பத்தில் விட்டு கொடுத்து சமாதானமாக, ஒற்றுமையாக வாழ்வதும், கொடுத்தலின் தத்துவம்தான். ஆகவே நாமும் நேர்மையான வழிகளில் உயர்ந்து, பிறருக்கு உதவிசெய்து நம் குழந்தைகளுக்கு முன்மாதிரியாய்த் திகழ்ந்து வாழ்வில் வெற்றி பெறுவோமாக.

- **திவ்யா கிங்ஸ்லி**, பொத்தக்காலன்விளை.

## மொத்த முட்டைகள் எத்தனை?

வேலையில்லாப் பட்டதாரி முட்டைகளை எடுத்துக் கொண்டு கடைவீதியில் போகும்போது எதிரே வேகமாய் வந்த ஆட்டோ அவன் சைக்கிளை முட்டிதள்ளியது.சைக்கிளில் பின்னாடி கட்டிவைக்கப்பட்ட முட்டைகளில் சில சரிந்து விழுந்து உடைந்தன.

**1. உடைந்த முட்டைகளின் எண்ணிக்கையை**

2,3,4,5,6 ஆல் வகுக்க மீதி1ம், 7ஆல் வகுக்க மீதியின்றி இருக்கிறது.

**2. உடையாமல் எஞ்சிய முட்டைகளின் எண்ணிக்கையை**

2,3,4,5,6-ஆல் வகுக்க மீதி 1,2,3,4,5 இருக்கிறது. மேலும் 7ஆல் மீதியின்றி வகுக்கப்படுகிறது என்றால் உடைந்தமுட்டைகள் எத்தனை? உடையாதமுட்டைகள் எத்தனை? மொத்த முட்டைகள் எத்தனை? - **ரா.பாங்ராஸ்.**

# நீரில் ஓர் விந்தை

நாம் அன்றாடம் பயன்படுத்தும் ஒரு எளிய வேதிப்பொருள்தான் நீர் என்பது. நீரில் ஒரு ஆக்ஸிஜன் அணுவும் இரண்டு ஹைட்ரஜன் அணுக்களும் சேர்ந்துள்ளன. நீர் $0^{\circ}C$ என்ற வெப்பநிலையில் உருகும். $100^{\circ}C$ என்ற வெப்பநிலையில் கொதிக்கும். நீரைப் போன்ற மூலக்கூறு அமைப்புகொண்ட மற்ற வேதிச்சேர்மங்களை ஒப்பிட்டுப் பார்த்து கணக்கிட்டால் நீரின் கொதிநிலை – $80^{\circ}C$ ஆக இருக்க வேண்டும் என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.இருப்பினும் நீரின் இந்த அதிகமான கொதிநிலைக்குக் காரணம் நீர் மூலக்கூறுகள் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து காணப்படுவதுதான். வெப்பப்படுத்தி நீரை கொதிக்க வைக்கும்போது இம்மூலக்கூறுகளிடையே உள்ள பிணைப்புகள் யாவற்றையும் சிதைக்க அதிக வெப்பம் தேவைப்படுகிறது. எனவேதான் நீரின் கொதிநிலை அதிகமாய் உள்ளது. அதனால் தான் நீர் நம் அன்றாட வாழ்வில் அதிகமாய் பயன்படுகிறது.

பொதுவாக ஒரு திடப்பொருளை உருக்கி திரவமாக்கும் போது அதன் அடர்த்தி குறைகிறது.எந்த ஒரு உலோகத் துண்டும் அதன் உருகிய உலோகத் திரவத்தில் மிதக்காது. ஆனால் நீர் வேறுபட்ட பண்பை பெற்றுள்ளது. திண்ம நிலையில் உள்ள பனிக்கட்டியின்அடர்த்தியானது திரவ நிலையில் உள்ள நீரின் அடர்த்தியை விடக் குறைவானது. எனவேதான் பனிக்கட்டியானது நீரின்மேல் மிதக்கின்றது. 1913–ம் ஆண்டு மிகப் பெரிய கப்பலான டைட்டானிக் ஒரு மிதக்கும் பனிப்பாறையில் மோதி அழிந்தது. இலட்சக்கணக்கான டன்கள் எடை கொண்ட பனிக்கட்டியும் நீரில் மிதக்கும் என்பதுதான் இதில் விந்தை.

இதேபோல் பனிக்கட்டி உருகிக்கிடைக்கும் நீருக்கும் சாதாரண நீருக்கும் வேறுபாடு உள்ளது.இதை ஆய்வு செய்ய விஞ்ஞானிகள் சேர்ந்துஒரு கோழிப்பண்ணையில் தம் ஆய்வை நிகழ்த்தினார்கள். ஒரே நாளில் முட்டையிலிருந்து வெளிவந்த கோழிக்குஞ்சுகளை இருபிரிவாக பிரித்தார்கள். ஒரு பிரிவிற்குசாதாரண நீரை அருந்தக் கொடுத்தார்கள். மற்றொரு பிரிவிற்கு பனிக்கட்டி உருகிய நீரை அளித்தார்கள். சாதாரண நீரை பருகும் கோழிக்குஞ்சுகள் எந்தவித ஆர்ப்பாட்டமுமின்றி பருகக் கண்டார்கள். ஆனால் பனி உருகியநீரைப் பருகிய கோழிக்குஞ்சுகளோ பேராசையுடன் போட்டி போட்டுக் கொண்டு நீர் அருந்துவதைக் கண்டார்கள். ஒன்றரை மாதங்களுக்குப் பின்னர் கோழிக்குஞ்சுகள் யாவும் எடை பார்க்கப்பட்டன. அதிசயிக்கும் விதமாக பனி உருகிய நீரை அருந்திய எல்லா கோழிக்குஞ்சுகளும் சாதாரண நீரை அருந்திய கோழிக்குஞ்சுகளைவிட எடை கூடுதலாகக் காணப்பட்டன. இதற்குக் காரணம் நீரில்மிகச் சிறிய அளவில் காணப்படும் கனநீராக இருக்கலாம் என்று முதலில் எண்ணினர். ஆனால் பின்னர்தான் தெரிந்தது பனி உருகிய நீரானது உயிரினங்களிலுள்ள உயிர் வேதி வினைகளை நன்கு ஊக்குவிக்கின்றது என்பது. உயிரினங்கள்உடல்கூறிலுள்ள நீரின் அமைப்பு பனிக்கட்டியின் படிகத்திலுள்ள நீரின் அமைப்பை பெரிதும் ஒத்துள்ளது. பனிக்கட்டி உருகிய பின்னரும் அந்த நீரில் பனிக்கட்டியின்படிக அமைப்பு உள்ளது. எனவேதான் பனி உருகிய நீர் உயிரினங்களின் உயிர்வேதிவினைகளை ஊக்கப்படுத்தி உடல் வளர்ச்சியைத் தூண்டுகிறது.



பூமியில் உயிரினங்கள் உயிர்வாழ இறைவன் படைத்து அளித்த ஒரு சாதாரணப் பொருளாகிய நீரிலேயே இவ்வளவு விந்தைகள் உள்ளன வென்றால் பூமி

முழுவதும் காணப்படும் பல்வேறு வேதிப் பொருட்களில் எவ்வளவு விந்தைகள் மறைந்திருக்கும்? காற்றுக்கு மட்டும் நிறம் இருந்திருந்தால் நம் கண்கள்பயனற்று போயிருக்கும். நீருக்கு மட்டும் சுவை இருந்திருந்தால் நம் நாவு வீணான ஒன்றாக ஆகியிருக்கும். காற்றுக்கு ஏதேனும் மணம் இருந்திருந்தால் நம் மூக்கு செயலற்று போயிருக்கும். நமக்காக ஒவ்வொன்றையும் நேர்த்தியாக படைத்துநமக்கு வழங்கிய நம் இறைவனின் கருணையை எண்ணி மகிழ்வோம். நன்றி கூறுவோம்.

**- த. பீட்டர் அந்தோணி ராஜ்**

# ஆண்டவரே குயவன்



தொடக்கத்தில் ஆண்டவராகிய கடவுள் உலகம் முழுவதையுமே தம்முடைய வாக்கினாலே உருவாக்கினார். ஆனால் மனிதனை படைக்கும்போது அவர் விரும்பியபடி எடுத்துக் கொண்டார். ஆண்டவர் தாமே நல்லகுயவன் என்பதை நிரூபித்தார்.

நாம் அனைவரும் ஆண்டவராகிய கடவுளின் கரத்தின் கிரியை என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். எப்படி அவர் நம்மை படைத்திருந்தாலும் 1. அது நல்லதாகவே இருந்தது. 2. எல்லாம் அவருடைய சித்தத்தின் படியே இருந்தது. களி மண்ணின் மீது குயவனுக்கு முழு அதிகாரமும் உண்டு.

1. என்னவற்றை உருவாக்கவேண்டும்? 2. எப்போது உருவாக்க வேண்டும்? 3. எப்படி உருவாக்கவேண்டும்? 4. உருவாக்கப்பட்ட பாத்திரத்தை என்ன நோக்கத்திற்கு பயன்படுத்த வேண்டும் என்பதை குயவனே முடிவு செய்கிறார்.

ஆயினும், ஆண்டவரே நீரே எங்கள் தந்தை
நாங்கள் களிமண், நீர் எங்கள் குயவன்
நாங்கள் அனைவரும் உம் கைவேலைப்பாடுகள் - எசாயா 64-8

களிமண்ணாகிய நாம் அல்லது உருவாக்கப்பட்ட பொருள் ஒன்று குயவனை கேள்வி கேட்பதற்கு எந்த உரிமையும் கிடையாது. எசாயா 29:16-ல் வேதம் சொல்கிறது. நீங்கள் செய்யும் முறைகேடுதான் என்ன? குயவனுக்கு களிமண் ஈடாகுமோ? கைவேலை தன் கைவினைஞனை நோக்கி நீர் என்ன உருவாக்கவில்லை என்று கூறலாமோ? வனையப்பட்டது தன்னை வனைந்தவனை நோக்கி உமக்கு அறிவில்லை என்று சொல்லலாமோ?

அவர் எல்லாவற்றையும் ஒன்றுபோல உருவாக்கவில்லை. அவர் தம்முடைய ஞானம், அறிவு, வல்லமையினாலே ஒவ்வொரு தனிப்பட்டநபரையும் உருவாக்கினார்.ஒவ்வொரு மனிதனும் வித்தியாசமான தனித்தன்மையை அடையாளமாக கொண்டு இருக்கிறான். எனவே சங்கீதக்காரன் தாவீது ( தி.பா 8:45) மனிதரை நீர் நினைவில் கொள்வதற்கு அவர்கள் யார்? மனித பிறவிகளை நீர் ஒரு பொருட்டாக எண்ணுவதற்கு அவர்கள் எம்மாத்திரம்? ஆயினும் அவர்களை கடவுளாகிய உமக்கு சற்றே சிறியவர் ஆக்கியுள்ளீர். மாட்சிமையும், மேன்மையையும் அவர்களுக்கு முடியாக சூட்டியுள்ளீர். யோவான் 1:12,13-ல் அவரிடம் நம்பிக்கை கொண்டு அவரை ஏற்றுக் கொண்ட ஒவ்வொருவருக்கும் அவர் கடவுளின் பிள்ளைகள் ஆகும் உரிமையை அளித்தார் அவர்கள் இரத்தத்

தினாலோ உடல் இச்சையினாலோ ஆண்மகன் விருப்பத்தினாலோ பிறந்தவர்கள் அல்ல. மாறாக கடவுளால் பிறந்தவர்கள்.அதாவது ஒரு உலகப்பிரகாரமான ஒரு தகப்பனுக்கு நாம் மாம்சமும், இரத்தமும் உடையவராய் பிறந்தாலும் அது உலகப்பிரகாரமான தகப்பனுடைய சித்தத்தினால் அல்ல. உண்மையான தகப்பனாகிய ஆண்டவரின் சித்தத்தின் படியே நாம் ஒவ்வொருவரும் பிறந்திருக்கிறோம்.

உலகம் தோன்றுவதற்கு முன்பே கடவுள் நம்மை கிறிஸ்து ஏசு வழியாக தேர்ந்தெடுத்தார்.உலகம் தோன்றுமுன்னரே முன்குறிக்கப்பட்ட அவர் (இயேசு), இந்த கடைசி காலத்தில் உங்களுக்காக வெளிப்படுத்தப்பட்டார்.

நமது ஆண்டவர் நம்முடைய சிருடிஷ்கள். நல்ல ஒரு குயவன். எரிகிற முட்செடியில் இருந்து ஆண்டவராகிய கடவுள் மோசேயை அழைத்து எகிப்தில் இருந்து என் ஜனங்களாகிய இஸ்ராயல் மக்களை பார்வோன் மன்னனிடம் இருந்து விடுவித்து அழைத்து வா என்று சொன்னதும் மோசே ஆண்டவரிடம் ஐயோ! (விடுதலைப்பயணம் 4-10). ஆண்டவரே! நீர் உமது அடியானிடம் பேசுவதற்கு முன்போ, பின்போ நாவன்மை அற்றவன் நான். ஏனெனில் எனக்கு வாய்திக்கும்; நாவும் குழறும் என்றான். அதற்கு ஆண்டவர் மனிதனுக்கு வாய் அளித்தவர் யார்? அவனை ஊமையாக அல்லது பார்வையுள்ளவனாக அல்லது குருடனாக வைப்பவர் யார்?. ஆண்டவராகிய நான் தானே என்றார்.

இந்த பூமியிலே ஒரு பாவமும் அறியாத குழந்தைகள் பலர் முடவர்களாக, குருடர்களாக, மனநிலை பாதிக்கப்பட்டவர்களாக, அரைகுறை பிறவியை உடையவர்களாக இருக்கிறார்கள். சிருஷ்டிப்புகளின் குயவனாகிய கடவுளை யார் கேள்வி கேட்க முடியும்? நாம் அனைவரும் வல்லமையுள்ள ஆண்டவராகிய கடவுளாகிய குயவனின் கரங்களில் உள்ள மண்பாத்திரங்களாக இருக்கிறோம். ஆண்டவராகிய கடவுள் நிலத்தின் மண்ணால் மனிதனை உருவாக்கினார். நீ மண்ணிலிருந்து உருவாக்கப்பட்டதால் மண்ணுக்கே திரும்புவாய் என்றார். நீ மண்ணினின்று வந்த உடல் மண்ணுக்கே திரும்புமுன்னும் கடவுள் தந்த உயிர் அவரிடமே திரும்பு முன்னும் உன்னை படைத்தவரை உள்ளத்தில் நினை.( சபை உரையாளர் 12-7 ) நம்முடைய வாழ்க்கை குயவன் கையில் உள்ள களிமண்ணுக்கு ஒப்பாய் இருக்கிறது. அந்த குயவனை நினை[illegible]தும்

# வாழ்க மரியே

வாரீர்! வாரீர்! பொற்பை நகர் வாரீர்! பாரீர் பாரீர் திருக்கல்யாணத்தாய் பாரீர். அழகின் முழுமையாம் எங்கள் தாய் அதிசயம் நிகழ்த்தும் எங்கள் தாய். வேண்டும் வரங்கள் வழங்கும்தாய்; வேண்டிப் பெற்றிட விரைந்து வாரீர்; திருமண வரம் தரும் எங்கள் தாய்; தீராத பிணி தீர்க்கும் எங்கள் தாய்; மழலைச் செல்வம் வழங்கும் தாய்; மன்றாடிக் கேட்க மகிழ்ந்து வாரீர். தொழில் வளம் புரிவாள் எங்கள் தாய்; தொட்டதெல்லாம் துலங்கவைப்பாள் எங்கள் தாய்; வறியவர்க்கு வாழ்வளிப்பாள் எங்கள் தாய்; வாழ்த்திப் போற்றிட விரைந்து வாரீர். எழில்மிகு நகரமாம் பொற்பையிலே எழிலரசியாய் வீற்றிருக்கும் எம்மன்னைக்கு ஆயிரம் வண்ண ஒளிவிளக்கும் அன்னை புகழ்பாடும் ஆதாரங்களும், ஜெபமாலை என்னும் பூமாலையை ஜெபித்து பாமாலை சாற்றிடுவோம். தேரில் வலம் வரும் தேவ அன்னைக்கு தெம்மாங்கு பாட்டுப்பாடி தெண்டனிட்டு வரம்மாரி பொழியும் வான்மகளுக்கு உப்புமாரி பொழிந்து உவப்புடனே நற்சுகம் கொடுக்கும் நன்மகளுக்கு நன்றிப்பா இசைத்து நடனமாடி பணிவோம் அவளின் திருப்பாதங்களில் பண்பாடுவோம் என்றும் வாழ்க மரியே.

S.நிர்மலர் ராணி, மார்க்கம்பட்டி.

# திருச்சபைச் செய்திகள்

பேரருட்திரு. முனைவர் R.ஜோசப் ரவிபாலன்

**1. திருத்தந்தையின் பிலிப்பைன்ஸ் பயணத்தில் நடந்த சோக நிகழ்வு**

திருத்தந்தை ஃபிரான்சிஸின் சமீபத்திய பிலிப்பைன்ஸ் நாட்டுப் பயணத்தின்போது, ஜனவரி 17ஆம் நாள் தாக்லொபான் என்கிற இடத்தில் திருப்பலி நிறைவேற்றிவிட்டுச் சென்றபின், அவர் திருப்பலி நிறைவேற்றிய இடத்தில் கட்டப்பட்டிருந்த சாரம் சாய்ந்ததனால், கிறிஸ்டல் படாசாஸ் என்கிற 27 வயது இளம் பெண் இறந்து போனார். கிறிஸ்டல் 'கத்தோலிக்க மீட்புப் பணிகள்' (Catholic Relief Services) என்கிற அமைப்பில் தன்னார்வத் தொண்டராக பணி புரிந்தார். இவர் 2013ஆம் ஆண்டு பிலிப்பைன்ஸ் நாட்டைத் தாக்கிய 'ஹையான்' அல்லது 'யோலாந்தா' என்கிற பெரும்புயலால் பாதிக்கப்பட்டுள்ள இடங்களில் சிறப்பான பணி புரிந்தார் என்பது குறிப்பிடத் தக்கது. கிறிஸ்டலின் மரணத்தைப் பற்றி அறிந்த திருத்தந்தை மணிலா நகரிலுள்ள புனித தோமா பல்கலைக் கழகத்தில் ஜனவரி 18ஆம் நாள் நடைபெற்ற இளையோரின் கூட்டத்தில் கலந்துகொண்ட மூன்று இலட்சம் பேரிடத்தில் அந்த இளம் பெண்ணின் மரணத்தைக் குறித்து அறிவித்ததோடு, இறந்துபோன அந்தப் பெண்ணிற்காக அனைவரும் கடவுளிடம் மன்றாடுமாறு அன்புடன் அழைத்தார். அவர்களுடன் இணைந்து இறந்து போனவருக்காக மங்கள வார்த்தை செபத்தைச் செய்தார். அந்த இளம் பெண்ணைக் குறித்து அவர் பேசும்போது, தாக்லொபானில் தான் நிறைவேற்றியத் திருப்பலிக்குமுன் செய்யப்பட்ட ஏற்பாடுகளில் அந்த இளம் பெண் மிகவும் ஆர்வத்துடன் உதவி புரிந்தார் என்பதையும் திருத்தந்தை நினைவுகூர்ந்தார். பிறகு மணிலாவிலுள்ள திருத்தந்தையின் தூதரின் அலுவலகத்தில் இறந்துபோன இளம் பெண்ணின் தந்தையையும், அவரது உறவினர் ஒருவரையும் திருத்தந்தை தனியாகச் சந்தித்து அந்தக் குடும்பத்தைத் தேற்றினார். தனது மகளின் இறப்பு தனக்கு பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தாலும், திருத்தந்தை நிறைவேற்றியத் திருப்பலியில் பலரும் கலந்துகொள்வதற்கான ஆயத்த ஏற்பாடுகளில் அவர் தனது பங்களிப்பை நிறைவாக வழங்கினார் என்பது தனக்கு ஆறுதலாய் உள்ளதாய் அவர் கூறினார். கிறிஸ்டலின் தாய் ஹாங்காங்கிலிருந்து பிலிப்பைன்ஸ்க்கு பயணம் செய்துகொண்டிருந்த காரணத்தினால் திருத்தந்தையால் அவரைச் சந்திக்கவும் முடியவில்லை அவருடன் தொலைப்பேசியில் தொடர்பு கொண்டு ஆறுதல் கூறவும் முடியவில்லை.

**2. புயலால் திருத்தந்தையின் பயணத்தில் ஏற்பட்ட இடையூறு :**

திருத்தந்தை பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள 'லெய்ற்றே' என்னும் இடத்திற்கு ஜனவரி 17ஆம் நாள் திருப்பலி நிறைவேற்றுவதற்காகவும், 2013ஆம் ஆண்டில் அந்த நாட்டில் பேரழிவை ஏற்படுத்தியப் பெரும்புயலால் பாதிப்படைந்த மக்களைத் தேற்றி, அவர்களுக்கு ஆறுதல் சொல்வதற்காகவும் வந்திருந்த வேளையில், 'மெக்காலா' என்று பெயர் சூட்டப் பட்டப் புயலுக்குரிய அறிகுறி இருந்த காரணத்தினால், திருப்பலி தொடங்குவதற்கு சுமார் நான்கு மணி நேரத்திற்கு முன், அவர் அந்தத் தீவைவிட்டுச் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஆகவே மதியம் ஒரு மணி அளவில் திருத்தந்தை மணிலாவிற்குச் சென்றார். பாலோ என்னுமிடத்தில் மதியம் 03.00 மணிக்கு 'திருத்தந்தை ஃபிரான்சிஸ் ஏழைகளின் மையத்தைத் திறப்பதாயும், மதியம் 03.30 மணிக்கு பாலோவின் ஆசனக்கோவிலில் (Cathedral) 2013ஆம் ஆண்டின் பெரும்புயலின் பாதிப்பிலிருந்து தப்பிய குருக்கள், irubAIஇருபால் துறவறத்தார் மற்றும் குடும்பங்களைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த நிகழ்வுகளில் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தபடி அவரால் கலந்துகொள்ள முடியாத சூழ்நிலை இருந்தபோதிலும் அவர் எங்கெங்கெல்லாம்சென்று நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள வேண்டியிருந்ததோ அந்த இடங்களிலெல்லாம் கொஞ்ச நேரம் தன் வாகனத்தை நிறுத்தி, அங்கே நடைபெறவிருந்த நிகழ்ச்சிகளில் தன்னால் கலந்துகொள்ள முடியாததற்காகத் தன்னுடைய வருத்தத்தைத் தெரிவித்தார். மேலும் பாலோவின் பேராயரின் இல்லத்தில் ஹையான் புயலின் தாக்கத்திலிருந்து மீண்டவர்களை அவர் சந்தித்துப் பேசினார். வேகமாக உணவருந்தி விட்டு, அங்கே அவரைப் பார்க்கக் கூடியிருந்தவர்களிடம் கையசைத்து வாழ்த்தியது மட்டுமில்லாமல் ஒரு சிலருடன் சேர்ந்து புகைப் படமும் எடுத்துக்கொண்டார். திருத்தந்தை ஃபிரான்சிஸ் ஏழைகளின் மையத்தினுள் நுழைய முடியவில்லையென்றாலும், தன்னுடைய ஊர்தியில் இருந்தவாறே அந்தக் கட்டிடத்தை ஆசீர்வதித்தார் என்று வத்திக்கான் செய்தித் தொடர்பாளர் அருட்திரு ஃபெடரிக்கோ லொம்பார்டி கூறினார். அவர் அங்கே குருக்கள்,

இருபால் துறவறத்தார் மற்றும் குருமாணவர்களை கொஞ்ச நேரம் பார்த்துப் பேசினார். "உங்களிடம் நிறைய பேசவேண்டும் என்றிருந்தேன். ஆனால் சூழ்நிலையின் காரணமாக உங்களிடம் அதிக நேரம் செல்விட முடியாததற்காக வருந்துகிறேன்" என்று கூறினார். அவர் தாக்லொபானிலிருந்து மணிலாவுக்குத் திரும்பி, திருத்தந்தையின் தூதரகத்திற்குச் சென்றுகொண்டிருந்தபோது, ஆயிரக் கணக்கான மக்கள் சாலையோரங்களில் நின்றுகொண்டு அவரை வாழ்த்தினார்கள்.

**3. திருத்தந்தையின் பிரியாவிடைத் திருப்பலியில் அறுபது இலட்சம் பேர் :**

ஜனவரி மாதம் 18ஆம் நாள் பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து திருத்தந்தை புறப்படுவதற்கு முன் மணிலாவிலுள்ள ரைசல் பூங்காவில் (Rizal Park) அவர் நிறைவேற்றியத் திருப்பலியில் அறுபது இலட்சம் பேர் கலந்துகொண்டனர். திருச்சபையின் வரலாற்றிலேயே ஒரு திருத்தந்தையைப் பார்ப்பதற்காக இவ்வளவு பெரிய கூட்டம் சேர்ந்தது இதுவே முதல் முறையாகும் என்று வத்திக்கானின் செய்தித் தொடர்பாளர் அருட்திரு ஃபெடரிக்கோ லொம்பார்டி கூறினார். தொடர்ந்து மழை பெய்துகொண்டிருந்த போதிலும் மக்கள் அதை பொருட்படுத்தாது பல மணி நேரம் அங்கே இருந்து குழந்தை இயேசுவின் விழாவை திருத்தந்தையுடன் சேர்ந்து கொண்டாடினர். பிலிப்பைன்ஸ் நாட்டு மக்கள் குழந்தை இயேசுவிடம் சிறப்பு பக்தி கொண்டவர்கள். அந்தத் திருப்பலியில் கலந்துகொண்டவர்களில் பலர் தங்கள் கைகளில் குழந்தை இயேசுவின் சுரூபத்தை ஏந்தி நின்றனர். அவர்களுடன் சேர்ந்து குழந்தை இயேசுவின் விழாவைக் கொண்டாடுவதில் மிக்க மகிழ்ச்சி அடைவதாக தன் மறையுரையின்போது திருத்தந்தை குறிப்பிட்டார். "இந்த நாட்டில் நற்செய்தி பரவியபோது, தொடக்கத்திலிருந்தே குழந்தை இயேசுவின் திருவுருவம் துணை நின்றது" என்று அவர் கூறினார். "ஓர் அரசரைப் போல ஆடையணிந்து, கிரீடத்தைத் தலையில் வைத்துக்கொண்டு, செங்கோலையும், பூமி உருண்டையையும், சிலுவையையும் தம் கையில் பிடித்துக்கொண்டு குழந்தை இயேசு தோற்றமளிப்பது கடவுளின் அரசிற்கும் குழந்தைப் பருவத்தின் ஆன்மீகம் என்னும் மறையுண்மைக்கும் இடையே உள்ள தொடர்பைக் காட்டுகிறது" என்று அவர் சுட்டிக்காட்டினார். நாம் அனைவரும் இறைவனின் பிள்ளைகள் என்பதையும், கிறிஸ்துவின் சகோதர சகோதரிகள் என்பதையும் குழந்தை இயேசு நமக்கு நினைவூட்டுகிறார் என்றும் திருத்தந்தை கூறினார். ஹையான் புயலினால் பாதிக்கப்பட்டவர்களிடம் தங்களது அனுதாபத்தைக் காட்டுகிறபோது, நாம் எல்லோரும் கடவுளின் பிள்ளைகள் என்னும் உண்மை வெளிப்படுகிறது. குழந்தை இயேசுவை ஏரோது கொல்ல முயற்சித்ததைச் சுட்டிக்காட்டி, கிறிஸ்தவர்கள் குடும்பங்களைப் பாதுகாப்பதின் அவசியத்தை குழந்தை இயேசுவின் விழா நமக்கு நினைவூட்டுகிறது என்றார்.ஒவ்வொரு குழந்தையும் வரவேற்கப்பட்டு, இரசிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட வேண்டிய கொடை என்பதை நாம் உணர வேண்டும் என்பதை வலியுறுத்தினார். பிலிப்பைன்ஸ் நாட்டு ஆயர்களின் பேரவைத் தலைவர் பேராயர் சாக்ரட்டீஸ் B. வில்லேகஸ் திருத்தந்தை ஃபிரான்சிஸின் பயணத்தின் முடிவு சூரிய மறைவுக்குச் சமம் என்று சொன்னார். சூரிய மறைவுக்குப்பின் வரும் இருளைப் பார்த்து மக்கள் பயப்படுகின்றனர்; ஆனால் திருத்தந்தை தன் பயணத்தை முடித்துச் சென்றபின் தங்களுக்கு எந்த பயமுமில்லை; காரணம் அவரது சில நாள் உடனிருப்பில் பிரகாசமான ஒளியைத் தாங்கள் பெற்றிருப்பதாகவும், அது பல தலைமுறைகளுக்குப் போதுமானது என்றும் அவர் கூறி, "திருத்தந்தையே, நீங்களே எங்களின் பிரகாசமுள்ள சூரிய ஒளி" என்று கூறினார்.

**4. திருத்தந்தையின் வருகைக்குப்பின் இலங்கை மக்களுக்கு நம்பிக்கை**

திருத்தந்தையின் சமீபத்திய வருகையைப்பற்றி மறுஆய்வுசெய்த இலங்கையின் கத்தோலிக்க ஆயர்கள் மிகுந்த நன்றியுடனும், நம்பிக்கையுடனும் இருப்பதாகக் கூறியுள்ளனர். தங்கள் நாட்டில் ஆட்சிமாற்றம்ஏற்பட்டுள்ளதை அவர்கள் வரவேற்றுள்ளனர். கத்தோலிக்கர்கள் மட்டும் திருத்தந்தைக்கு வரவேற்பு கொடுக்கவில்லை; மாறாக, எல்லா மதத்தினரும் அவரது வருகையை மனதார ஏற்று மகிழ்ந்தனர் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.விமானநிலையத்திலிருந்து கொழும்பு நகரத்திற்கு திருத்தந்தை சென்றபோது, 25 கிலோ மீட்டர் தூரத்திற்கு வழி நெடுகிலும் இலட்சக் கணக்கான மக்கள் நின்று அவரை

வாழ்த்தினர் என்று ஆயர் வேலன்ஸ் மெண்டிஸ் கூறினார். ஜனவரி 14ஆம் நாள் திருத்தந்தை நிறைவேற்றியத் திருப்பலிக்கு ஐந்து இலட்சம் பேர் வரை வருவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது; ஆனால் ஏறக்குறைய பத்து இலட்சம் பேர் அதில் கலந்து கொண்டனர் என்று அவர் கூறினார். இலங்கையின் முதல் புனிதராகிய ஜோசப் வாஸிற்கு திருத்தந்தை புனிதர் பட்டம் கொடுத்ததும், இலங்கையின் முக்கியத் திருத்தலமாகிய மடு மாதா திருத்தலத்திற்கு திருத்தந்தை சென்று, மாதாவின் சுரூபத்தை வைத்து மக்களை ஆசீர்வதித்ததும் முக்கிய நிகழ்வுகளாகப் பார்க்கப்பட்டன. "திருத்தந்தை ஒப்புரவு, ஒற்றுமை மற்றும் சமாதானம் தேவை என்றார். ஆட்சி மாற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, நமது நம்பிக்கை அதிகரித்துள்ளது என்றும், எழுத்துரிமை, பாரபட்சமற்ற நீதி மற்றும் சிறுபான்மையினரின் உரிமைகளுக்கு புதிய அரசாங்கம் உத்திரவாதம் தரும் என்கிற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது என்று மண்ணார் மறைமாவட்டத்தின் ஆயர் ஜோசப் ராயப்பு கூறினார்.

**5. வியட்நாமுக்கு மேய்ப்புப்பணி பயணம் :**

அனைத்துலக மக்களின் மறைபரப்பும் பணியின் பேராயத்தின் தலைவர் கர்தினால் ஃபெர்னாண்டோ ஃபிலோனி ஜனவரி மாதம் 19ஆம் நாள் வியட்நாமுக்குச் சென்றார். அவர் ஏற்கெனவே திருத்தந்தையுடன் சேர்ந்து இலங்கைக்கும், பிலிப்பைன்ஸ் நாட்டிற்கும் சென்றிருந்தார். வியட்நாமில் ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர்கள், குருமாணவர்கள் மற்றும் இறைமக்களைச் சந்தித்தார். ஜனவரி 20ஆம் நாள் ஹனோய் நகரத்தின் ஆசனக்கோவிலில் திருப்பலி நிறைவேற்றினார். அதற்கு மறுநாள் பலதரப்பட்ட சிறுபான்மை இனத்து மக்கள் அதிகமாயுள்ள ஹுங் ஹோவா மறைமாவட்டத்திலுள்ள ஒரு பங்கிற்குச் சென்று மக்களைச் சந்தித்தார். ஜனவரி 22ஆம் நாள் லா வாங் என்கிற இடத்திலுள்ள மாதாவின் திருத்தலத்திற்குச் சென்றார். 1798ஆம் ஆண்டில் காந் திந் என்கிற பேரரசர் யாரும் கத்தோலிக்கத் திருச்சபையில் இருக்கக்கூடாது என்று கட்டளையிட்டு, கத்தோலிக்கர்களைத் துன்புறுத்தினார். அவ்வேளையில் லா வாங்கிலுள்ள மழைக் காட்டில் மக்கள் தஞ்சம் புகுந்து, ஒரு மரத்தின் அடியில் இருந்து செபமாலை செபித்தனர். அப்போது மாதாவும், குழந்தை இயேசுவும் அந்த மக்களுக்குக் காட்சியளித்து, அவர்களைத் தேற்றி, அருகிலிருந்த மரங்களின் இலைகளை அவித்து நோய்வாய்ப்பட்டவர்களை அதை வைத்துக் குணப்படுத்த வேண்டும் என்று கூறினர். இந்தக் காட்சியைப் பற்றி எழுத்து வடிவில் ஆதாரம் இல்லையென்றாலும், திருத்தந்தை ஜான் பால் லா வாங் மாதாவின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, அந்தத் திருத்தலத்தை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும் என்று கூறினார்.

**6. பிற மதங்களை மதிக்கும் திருத்தந்தைக்குப் பாராட்டு :**

எழுத்துரிமையும் பிற மதங்களையும் அவற்றின் அடையாளங்களையும் மதிக்கும் தன்மையும் ஒன்றோடொன்று இயைந்து செல்ல வேண்டும் என்று கொழும்புவிலிருந்து மணிலாவுக்குப் பயணம் செய்தபோது திருத்தந்தை ஃபிரான்சிஸ் கூறியதை ஜோர்டான் நாட்டின் அரசர் இரண்டாம் அப்துல்லா வெகுவாகப் பாராட்டியுள்ளார். பெதூயின் இனத்துத் தலைவர்களிடம் அவர் பேசும்போது திருத்தந்தையைப் பாராட்டினார். "நாம் பிற மதத்தவரைச் சீண்டாமலும், அவர்களின் நம்பிக்கையை அவமானப்படுத்தாமலும், கேலி செய்யாமலும் இருக்க வேண்டும்" என்று திருத்தந்தை வலியுறுத்தினார்.

**7. மணமுறிவு விசாரனை (Annulment process) துரிதப்படுத்தப்பட வேண்டும் :**

திருச்சபையில் மணமுறிவு சம்பந்தமாக விண்ணப்பிப்பவர்களின் விண்ணப்பங்களை விரைவில் பரிசீலித்து, முடிவை வழங்க வேண்டும் என்று திருத்தந்தை அறிவுறித்துயுள்ளார். 'திருமணத்தின் மாண்பு' (Dignitatis Connubi – The Dignity of Marriage) என்கிற தலைப்பில் வெளிவந்த அறிவுரை மடலின் பத்தாவது ஆண்டு நிறைவின்போது திருத்தந்தை இந்தக் கருத்தைக் கூறினார். மணமுறிவு சம்பந்தமான விசாரனை நீண்ட காலத்திற்கு இருப்பதாகவும், அது சம்பந்தப்பட்ட மக்களுக்கு அதிகமன உளைச்சலைத் தருவதாகவும் பலர் கூறியுள்ள கருத்தின் அடிப்படையில் திருத்தந்தை இந்தக் கருத்தை வழங்கியுள்ளார்.

# உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்

**தொடர்பு கொள்ளுங்கள் - 04639-261230 , 261330, 261430**

**03-01-2015 முதல் சனி அன்னையிடம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள்**

| | | |
|---|---|---|
| திருமணவரம்கிடைக்க | - | 1239 பேர் |
| குழந்தைபாக்கியம் | - | 1320 பேர் |
| சுகப்பிரசவம் | - | 970 பேர் |
| நற்சுகம்பெற | - | 1867 பேர் |
| ஆன்மீகநலன்களுக்காக | - | 793 பேர் |
| தேவஅழைத்தல் | - | 698 பேர் |
| வேலைகிடைக்க | - | 1973 பேர் |
| தொழில்முன்னேற்றம் | - | 1465 பேர் |
| குடும்பசமாதானம் | - | 973 பேர் |
| குடும்பநலன் | - | 629 பேர் |
| உறவினர்நன்மைக்காக | - | 536 பேர் |
| தேர்வில்வெற்றிபெற | - | 1244 பேர் |
| அலகைதொல்லைதீர | - | 978 பேர் |
| மனஅமைதிக்காக | - | 1349 பேர் |
| அறுவைசிகிச்சைவெற்றிபெற | - | 637 பேர் |
| மனமாற்றமடைய | - | 749 பேர் |
| குடிப்பழக்கத்திலிருந்துவிடுபட | - | 2302 பேர் |
| நல்லஇல்லம்அமைய | - | 799 பேர் |
| சோதனைகளைவெல்ல | - | 439 பேர் |
| கடன்தொல்லைதீர | - | 2004 பேர் |
| வழக்கில்வெற்றிபெற | - | 565 பேர் |



**அருள்தரும் இமயமே! திருக்கல்யாணத் தாயே! உம்பிள்ளைகளுக்காக வேண்டிக்கொள்ளும்.** **- பங்குத்தந்தை**

**உங்கள் ஜெப உதவிக்கு எங்கள் இணையதள முகவரி :kalyanamatha@gmail.com**

## சிந்தனை துளிகள்

1. நியாயத்தை குற்றப்படுத்தாதே
   குற்றத்தை நியாயப்படுத்தாதே
2. உன் மனம் விசாலமானால்
   உன் விலாசம் பிறரால் அறியப்படும்
3. பசியிருப்பது உடலுக்கு நலம்
   பக்தியிருப்பது வாழ்வுக்கு நலம்
4. செருப்பு காலுக்கு நல்லது
   பொறுப்பு வாழ்வுக்கு
நல்லது
5. தொழுது பெறமுடியாததை
   அழுது பெறமுடியும்



-டே. நிஜிதா, வெள்ளக்கோவில்

## திருக்கல்யாண மாதா

வெண்ணிலவின் முழுஅழகை
காட்டியவளாய்
பார்வையில் அன்பை
வெளிப்படுத்தியவளாய்
இதழில் உண்மையின் மறுவுறுவானவளாய்
விண்மீன்களை தலைமுடி என
கொண்டவளாய்
கருவினில் சுமந்த பாலனை கையில்
ஏந்தியவளாய்
வானக தந்தை முன் உயர்ந்தவளாய்
நிலவினை காலடியாய் அணிந்தவளாய்
பூலோக அரசியாய் திகழ்ந்தவளே!அம்மா
உயர்ந்த உம் அன்பு வாழ்க.

-அ.சர்மிஷ்டா பொற்பை

# கவிதைச் சோலை

## சிந்தித்து செயல்படு

| | |
|---|---|
| நட | – மெதுவாக |
| படி | – தொடர்ச்சியாக |
| பேசு | – இனிமையாக |
| சிரி | – மகிழ்ச்சியாக |
| உண்ணு | – அளவாக |
| உறங்கு | –நிம்மதியாக |
| சிந்தி | – சுயமாக |
| பணிசெய் | – ஆர்வமாக |
| சம்பாதி | – நேர்மையாக |
| சேமித்து வை | – முறையாக |
| பழகு | – பண்பாக |
| நேசி | – உண்மையாக |
| வாழு | – வளமாக |
| இரு | – நலமாக |

டே.கீர்த்திகா, வெள்ளக்கோயில்

## வாழ்க்கை மொழிகள்

| | |
|---|---|
| காக்க வேண்டியது | – நல்ல சிந்தனைகள் |
| மறக்க வேண்டியது | – பிறர் குற்றங்கள் |
| விட வேண்டியது | – பொறாமை |
| விடக்கூடாதது | – நல்ல வாய்ப்புகள் |
| எதிர்க்க வேண்டியது | – தீவிரவாதம் |
| எளிதானது | – குறை கூறுதல் |
| கடினமானது | – நல்வழி நடத்தல் |
| இனிமையானது | – போதும் என்ற மனம் |
| இன்னல் தருவது | – பேராசை |
| தேவையானது | – சமயோசிதபுத்தி |
| தேவையில்லாதது | – பிறர் மீதான வெறுப்பு |

-டி. அந்தோணி ஜெர்லின் ,பொற்பை.

## நேசித்தேன் திருக்கல்யாணத்தாயே..



அம்மா
திருக்கல்யாணத்தாயே
உறவை
நேசித்தேன்
புரியாமல் போனது
உண்மையை
நேசித்தேன்
பொய்யாய் போனது
காற்றை நேசித்தேன்
காணாமல் போனது
நெருப்பை நேசித்தேன்
அணைந்து போனது
மழையை நேசித்தேன்
நின்று போனது
ஆனால் தாயே உன்னை
நேசித்தேன்
எனக்கு தேவையான எல்லாமே
கிடைத்தது
என் வாழ்வே வசந்தமானது

-P. ஜோஸ்பின் ,பொற்பை.

## அரிதான பெருமைதானே...

அன்பிற்கே அன்பு செய்தல் அரிதான
செயலாகாது
அன்பிலார்க்கு அன்பு காட்டுவதுதான்
சரியானது
வீண் செயல் ஆர்ப்பாட்டங்கள் விழைவது
உண்டென்ருல்
விண் புகழ் விருப்பம் வைக்க ஈடேலாகாது
மறைவான அறையிலுள்ள மாண்பான
தந்தை முன்னே
நிறைவான மனதினிலே நெகிழ்வோடு
ஜெபிக்க வேணும்
முறையாக அமைதியோடு முன் ஜெபம்
செய்வதாலே
இறைவன் இதயம் பேசும் என்பதை நீ
அறிவாயே
பொய்யான நடிப்பில் மேட்டிமை கொண்ட
ஜெபங்கள் செய்தே
வையத்தை ஏய்ப்பார்க்கு வரம் தருவாள்
எவர் இங்கே
ஜெய ஜெபம் செய்வோர் மனம் வருந்தி
ஜெபிப்பதுதானே
ஐயன் இயேசுவும் தாய் மரியாளும் நம்
அரிதான பெருமைதானே

Y.V.R.ஜோஸ், சென்னை

# புனித மரி பெர்னதெத் சூபிரு (1844 – 1879)

இவருடைய பெற்றோர் ஏழைகள், குடியானவர்கள் பொறுமைசாலிகள் தங்களால் ஆன மட்டும் உடை, உணவு முதலியவற்றை இவளுக்கென கொடுத்து வந்தார்கள், ஆஸ்துமா என்னும் கொடிய நோயால் இவள்வருந்தினாள்.13 வயதில் மாடுகளை மேய்த்துவந்த இவள் வயல் வெளிகளையும், அழகிய வானத்தையும், ஆடுகளையும், மாடுகளையும், செபமாலையையும் நேசித்தாள்.புதுநன்மை வாங்க இவள் தன்னைத் தயாரித்துக் கொண்டிருந்தாள். அச்சமயத்தில்தான் மாதாவின் அழகிய காட்சிகள் தோன்றின. 11.2.1858-ல் அவள் தன் தங்கையோடும் சிநேகிதியோடும் விறகு பொறுக்கச் சென்றாள். அன்று காலையில் பயங்கரமான குளிர். மாதாவை 18 முறை பார்க்கும் பாக்கியம் இவளுக்குக் கிடைத்தது. மாதா கொடுத்த வேலையை இவள் செய்து முடித்தபின் இவள் நெவெர் நகருக்குப் போய் அங்குள்ள மடத்தில் கன்னியாஸ் திரியானாள். 1866-ல் லூர்து நகரை விட்டுச் சென்றவள் திரும்ப அந்நகருக்கு வரவில்லை. 30.10.1867-ல் அவள் சபையின் வார்த்தைப்பாடுகளை உச்சரித்தாள். மடத்தில் அவள் நோயாளிகளைக் கவனித்தும் பலபீடத்திற்கானவைகளைத் தயாரித்தும் வந்தாள். இவளை மடத்தில் அவ்வளவு கவனித்ததாகத் தெரியவில்லை. ஒருவர் இதைக் கண்டு திகைத்தார். இதைக் கவனித்த பெர்னதெத் நான் கடவுளது கையில் ஒரு விளக்குமாறு. வீட்டைப் பெருக்க விளக்குமாறு பயன்படுத்தப் -படுகிறது. வீட்டை பெருக்கி முடித்ததும் அதை ஒரு மூலையில் போட்டு விடுகிறார்கள். அதேபோல் கடவுள் என்னை ஒரு முக்கியமான வேலைக்கு பயன்படுத்தினார். அவ்வேலை முடிந்துவிட்டதது இப்பொழுது என்னை ஒரு மூலையில் போட்டுவிட்டார் என்று சாதாரணமாகச் சொன்னாள்.பெர்னதெத் தாழ்ச்சி நிறைந்தவள் தனக்கு தோத்திரமாக ஒரு கோவில் கட்டும்படி தேவதாய் விரும்பினாள். அந்த விருப்பத்தை இவள் பங்கு தந்தையிடம் தெரிவித்தாள். அவரோ? எங்கிருந்து பணம் கிடைக்கும்? கோவிலை எப்படிக் கட்டவது? என்று சத்தமிட்டார். எப்படியோ பணம் கிடைத்தது. கோயில் கட்டப்பட்டது. கோவில் அபிஷேகம் நடக்க இருந்தது. பெர்னதெத் விழாவுக்குப் போகவில்லை. நான் போவேனானால் எல்லோரும் என்னையே கவனித்துக் கொண்டிருப்பார்கள், பரலோக அன்னையைப் பார்க்க பேறு பெற்றவளான என்னைப் பாராட்டுவார்கள். என் பிறகே வருவார்கள். என் உடையைத் தொட்டு, முத்தமிட ஆசிப்பார்கள் என்று அவள் சொல்லிமடத்திலேயே தங்கிவிட்டாள். இவள் ஆண்டவர் பாடுபட்ட சுரூபத்தைக் கட்டிப்பிடித்துக்கொண்டு 16.4.1879-ல் உயிர் துறந்தாள்.

சிந்தனை:

பிறர் நம்மைப் பார்க்க வேண்டும். நாம் பிறரைப் பார்க்க வேண்டும் என்னும் ஆசைக்கு இடம் கொடுக்கலாகாது.

செபம்:

பாவமில்லாமல் உற்பவித்த மரியாயே உம்மைத் தேடிவரும் எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

நன்றி, தூயவர்களின் வரலாறு

# இந்தியாவின் ஏவுகணை ஜனாதிபதி



உலகிலேயே இரண்டாவது மிகப்பெரிய குடியரசு நாடு இந்தியா என்பது நம் அனைவருக்கும் தெரியும். ஆனால் ஏவுகணை விஞ்ஞானியை தனது ஜனாதிபதியாக கொண்ட ஒரே நாடு இந்தியாதான் குடியரசு கொண்ட நாட்டின் வரலாற்றில் இது தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். டாக்டர் கலாமின் வாழ்க்கை அனைவருக்கும் சிறந்த ஓர் உதாரணம். தமிழ்நாட்டில் இராமேஸ்வரத்திற்கு அருகிலுள்ள தனுஷ்கோடியில் 1931 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15 ஆம் நாள் கலாம் பிறந்தார். அவரதுமுடிப்பெயர் அவில் பக்கிர் ஜெய் வலாபுதீன் அப்துல்கலாம். அவரது தந்தை மீனவர்களுக்கு படகுகளை வாடகைக்கு விட்டு தான் வாழ்க்கை நடத்தினார். கலாம் இராமநாதபுரத்தில் உள்ள ஸ்க்வார்பஸ் பள்ளியில் மேல்நிலைக் கல்வி படித்தார். பின் திருச்சியில் உள்ள ஜோசப் கல்லூரியில் பொறியியல் பயின்றார். 1958-ல் பாதுகாப்புஆராய்ச்சி வளர்ச்சி நிறுவனத்தில் **(DRDO)** சேர்ந்து 5ஆண்டுகள் வரை அங்கு பணி புரிந்தார். பின் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்திற்கு **(ISRO)** மாறினார்.**ISRO**-வில் அவர் திட்ட இயக்குநராக இருந்தார். அப்போது தான்அவர் தயாரித்த முதல் விண்கலம் **SLV II;** இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதல் விண்கலம் அதுதான். பூமியின் சுற்று பாதைக்கு அருகில் ரோகினி செயற்கை கோளை இது செலுத்தியது. **ISRO**வில் அவர் 19 ஆண்டுகள் இருந்தார். பின் அவர் தொழில்நுட்ப பார்வை 2020 என்ற கோட்பாட்டை அவர் தொடங்கினார். 1999 முதல் 2001 வரை முதன்மை அறிவியல் ஆலோசகராக இருந்தார்.அவருக்கு வழங்கப்பட்ட விருதுகள் ஏராளம் 1981 பத்ம பூஷன் 1990 பத்ம விபூஷன் மற்றும் உயர்ந்த விருதான பாரத ரத்னா விருதும் 1997 வழங்கபட்டது. அறிவியல்,தொழில்நுட்ப விருது ஹெச்ஃபிரோடியா,இந்திராகாந்தி விருதும் அவருக்கு வழங்கப்பட்டது.அவர் சைவ உணவு மட்டுமே உட்கொள்வார். மதுவை முற்றிலும் விலக்கியவர். அவர் இசையை மிகவும் விரும்புவார். திருக்குறளின் மீது அதிக ஆர்வம் உடையவர் ராஷ்டிரபதி பவனில்தினமும் ஒரே திருக்குறளை காட்சிக்குவைப்பவர். அவரது சொந்த ஊர் தனுஷ்கோடி இப்போது இல்லை 1966 ஆண்டு ஏற்பட்ட புயலில் கடலால் அந்தஊர் விழுங்கப்பட்டது. ஆனாலும் தனுஷ்கோடி விலைமதிக்க தக்க பொக்கிஷத்தை விட்டு சென்றது. அதுதான் கலாம்.

S.டிவாஸ்



அருள்தரும் இமயம்

# திருக்கல்யாணத்தாயின் அற்புதங்கள்... சாட்சிகள்...

1. குழந்தை பாக்கியம் கிடைத்ததற்கு நன்றி – சுசீலா கோமஸ் தூத்துக்குடி
2. மகளுக்கு வேலை கிடைத்ததற்கு நன்றி –சிறிய புஷ்பம் சாமியார் மடம்.
3. தேர்வில் வெற்றி பெற்றமைக்கு நன்றி – ராஜேஸ் வில்லுக்குறி
4. திருமணம் நன்றாக நடந்தமைக்கு நன்றி –ரீனோ பிருந்தா கண்டன்விளை
5. குழந்தை பாக்கியம் கிடைத்ததற்கு நன்றி – பிதலிஸ், தூத்துக்குடி
6. வெளிநாடு செல்ல விசா கிடைத்ததற்கு நன்றி – லிப்சன் புன்னக்காயல்
7. குழந்தை வரம் கிடைத்ததற்கு நன்றி – அனிஸ்டன் அன்பரசி தூத்துக்குடி
8. திருமணம் நடந்ததற்கு நன்றி –சுதர்சன் வினிஸ்டா பெரியதாழை
9. நற்சுகம் கிடைத்ததற்கு நன்றி – அமல புஷ்பம் பொத்தக்காலன்விளை
10. நினைத்த காரியம் நிறைவேறியதற்கு நன்றி – மேரி வடக்கன் குளம்
11. வேலை கிடைத்தமைக்கு நன்றி – ஜெய சேசையா தூத்துக்குடி
12. பேரப்பிள்ளைகளுக்கு நற்சுகம் கிடைத்தமைக்கு நன்றி – மெல்டன் வசந்தி தூத்துக்குடி
13. திருமணம் நடந்தமைக்கு நன்றி – விஜி நாகர்கோவில்
14. வேலை கிடைத்ததற்கும், திருமணம் நடந்ததற்கும் நன்றி – ஆக்னஸ் ஸ்வீட்டி தூத்துக்குடி
15. திருமணம் நல்ல முறையில் நடந்தமைக்கு நன்றி – ஸ்டெபி நாகர்கோவில்
16. புதிதாக வீடு கட்டியதற்கு நன்றி – ப்ரியா ஆனந்த்
17. கண் சுகம் கிடைத்தமைக்கு நன்றி – பழனி சங்கர் முதலூர்
18. உடல் நலம் கிடைத்தமைக்கு நன்றி – ஜாக்சன் கூட்டப்பனை
19. வேண்டிய காரியம் நடந்தமைக்கு நன்றி – மகிமா தாமஸ்
20. மகள் திருமணம் நிச்சமானதற்கு நன்றி – ஜெயராஜ், திசையன்விளை
21. வெளிநாட்டில் வேலை கிடைத்ததற்கு நன்றி – ஸ்பேர்ஜன் சுபா, வள்ளியூர்
22. சுகப்பிரசவம் நடந்ததற்கு நன்றி – மிக்கேல்ராஜ், பொத்தக்காலன்விளை
23. மூளை அறுவைசிக்ச்சை நல்ல முறையில் நடந்ததற்கு நன்றி – ஜோனி களியக்காவிளை
24. குழந்தை கிடைத்ததற்கு நன்றி – ஆன்ஸி கபிரியேல், விளிஞம்
25. அறுவைசிக்ச்சை நல்ல முறையில் நடந்ததற்கு நன்றி – அந்தோனி , பாலராமபுரம்
26. சொந்தவீடு கிடைத்தமைக்கு நன்றி – வினேத், பாலராமபுரம்
27. நிரந்தர வேலை கிடைத்தமைக்கு நன்றி – மெர்லின் ரெக்ஸி , திருவனந்தபுரம்
29. பதவி உயர்வு கிடைத்ததற்கு நன்றி – ரூபி அனன்சியா, திருச்சி
30. 8 ஆண்டுகளுக்கு பிறகு குழந்தை பாக்கியம் கிடைத்ததற்கு நன்றி – இசக்கியப்பன், ஜெயமணி

# திருக்கல்யாண அன்னையின் திருவிழா காட்சிகள்



தூத்துக்குடி மறைமாவட்ட ஆயர் மேதகு. இவோன் அம்புரோஸ் அவர்கள் திருப்பலி நிறைவேற்றும் காட்சி



திருக்கல்யாண அன்னை தேரில் வரும் காட்சி

## லூர்து பதியில் தோன்றிய பேரொளி!



மலைகளுக்கிடையே எழுந்திடும் காலை கதிரவன் ஒளி
மனத்திற்கு புத்துயிர் ஊட்டி உலகிற்கு வாழ்வளிப்பது போல்
மனுக்குலத்தை ஒளிர்வித்து நித்திய வாழ்வளித்திட
லூர்து பதியில் தோன்றிய பேரொளியே!
லூர்து நாயகியான அமல உற்பவ கன்னி மரியே
காற்றின் அசைவின் நடுவில் ஒளியின் வடிவில்
காரிருளைப் போக்க வந்திட்ட பேரொளியாய்
1858 பிப்ரவரி திங்கள் பதினோராம் நாள்
பெர்னதேத் சூபிரஸ் என்ற சிறுமிக்கு காட்சியளித்து
திருக்கோயில் கொண்டாய் லூர்து மலை தனில்!
திருவாய் மலர்ந்தருளினாய் நாமே அமல உற்பவமென்று!
மார்ச் திங்கள் 25 மங்கள வார்த்தை திருநாள் அன்று!
பாவிகள் மனம் திரும்புவதற்காய் செபிக்க மன்றாடி
பாவங்கள் கழுவிட லூர்துபதியில் நீர்சுனை தந்து
நின் வேண்டுகோளின்படி பவனியாக வந்திட்டாய்
மெழுகுதிரி ஒளியின் வடிவில் எம் கரங்களில்!
ஆண்டுதோறும் பிப்ரவரி திங்கள் பதினோராம் நாள்!
சனிதோறும் பவனி வரும் வரம்பெற்றிட்டாய் பொற்பையில்!

**M.மிக்கேல் உஷா,** பொற்பை.

## திருக்கல்யாணத்தாய்



அன்னையின் குணமோ
அன்பினில் தெரியும்
ஆழியின் குணமோ
அலையினில் தெரியும்
இயற்கையின் குணமோ
பசுமையில் தெரியும்
ஈதழின் குணமோ
இன்பத்தில் தெரியும்
உறவின் குணமோ
துன்பத்தில் தெரியும்
ஊழ்வினை குணமோ
பிறப்பினில் தெரியும்
எதிரியின் குணமோ
சினத்தினில் தெரியும்
ஏழையின் குணமோ
சிரிப்பினில் தெரியும்
ஐயத்தின் குணமோ
அசைவினில் தெரியும்
ஒளியின் குணமோ
விழியினில் தெரியும்
ஓசையின் குணமோ
இசையினில் தெரியும்
ஔடதமாம் திருக்கல்யாணத்தாயின் குணமோ
அவரை நாடி வந்து வரங்களைப் பெற்றுச் செல்லும்
மக்களுக்கு தெரியும்

டே. கீர்த்திகா, வெள்ளக்கோயில்

# புதுமை அமல அன்னை



நாமே அமலோற்பவம் என்று தனது பெயரை இவ்அவனிக்கு வெளிப்படுத்திய அன்னையின் பெருநாளை இறை திருச்சபை பல நூற்றாண்டுகளாக உண்மையாக ஏற்றும் இறை மக்களாகிய நாமனை வருமே கொண்டாடி இருகரம் கூப்பி வணங்குகிறோம். புனித பாப்பரசர் 9ம் பத்திநாதர் அன்னைமரி அமல உற்பவி என்று நான்கு ஆண்டுகளுக்குப்பிறகு 1854-ம் ஆண்டு திருத்தந்தை 12-ம் பயஸ் திருச்சபை நம்பும் மறை உண்மையாகப் பிரகடனம் செய்தார்! 1858-ம் ஆண்டு ஜீலை மாதம் 16-ம் தேதி முதல் பிப்ரவரி மாதம் 11-ம் தேதி வரை 14 வயதுடைய பெர்னத் என்ற சிறுமிக்கு 18 முறை அமல அன்னை காட்சி கொடுத்தும் சிறுமியின் வேண்டுதலின்படி நாமே புதுமையுள்ளஅமல அன்னை என்று உலகுக்கு வெளிப்படுத்தியும், திருச்சபையும் கத்தோலிக்க மக்கள் அனைவரையுமே பாவமாசிலிருந்தும், தீயவனின் தொல்லைகளில் இருந்தும், ஒவ்வொரு நிமிடமும் பாதுகாத்தும் இவ்வினிய மேன்மை மிக்க நிலையை அடைய 153 ஜெபமணி ஜெபமாலை, ஜெயமாலையாக அன்றாடம் ஜெபித்தும் இறை பக்தியாய் இருப்பதைவிட சிறந்தவழி வேறெதுவுமில்லை.

மேலும் எல்லா ஜெபவழிபாடுகளுள் மிகமிக அருள்வரம் நிறைந்ததும், மிகமிக அழகுவாய்ந்ததும் இச்செபமாலையே ஒரு கத்தோலிக்க கிறிஸ்துவனுக்கு எல்லா நூல்களுள் மிகவும் முதன்மையான நூல் தூய நற்செய்தி ஜெபமாலை மிகமிக உண்மையான நற்செய்திகளின் சுருக்கம்! என்று லக்கோரதேர் வெளிப்படுத்தியுள்ளார்.

நீங்கள் என்னை அனுதினமும் நினைவு கூறும் பொருட்டு நான் உங்களுக்கு விடுத்துச் செல்லும் மரணசாசனம் இச் ஜெபமாலையே என்று புனித பாப்பு பத்தாம் பத்தினாதர் கூறியுள்ளார்.

நம் அமலஅன்னை அகிலத்தின்தாய் "நம் பரிந்துரையின் அமல அன்னை" தன்னையும் தன் அன்பு மகனையும் இத்தரணிக்குத் தந்ததால் நம் அனைவரின் அன்பு அருள் வாழ்வுக்கு நல் ஆலயமாக, நல் வரங்களை நாம் கேட்டும் கேட்பதற்கு முன்னாலே தந்தும், தன்னை நாடி வருவோருக்கெல்லாம் ஆகட்டும் என்ற வார்த்தையின் படி, தன் அன்பு மகனின் இறை வார்த்தைபடி, எல்லா அடிப்படையான வரங்களுக்கு இறை மகனுக்கு நன்றி கூறி திருச்சபையின் மக்களனைவரும் இவ்வுலகில் சிறப்பாக நன்குவாழ ஜெபமாலை ஜெபிப்போம்! ஜெயம் பெறுவோம் ! மரியே வாழ்க!

**.யூஜின் கெய்வின், வீரபாண்டிய பட்டனம்**



# எனது கிராமம்

– ம. ஜேசுதாசன்
(முன்னாள் தலைவர்,
தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி)

பொத்தக்காலன்விளையின் மருத்துவர்கள்

ஆங்கில மருத்துவ முறையில் மருத்துவம் பயின்ற மருத்துவர்களும் மருத்துவ வசதிகளும் இல்லாத அந்தக்காலத்தில் பொத்தக்காலன்விளை கிராமம் ஒரு மருத்துவ தலமாக திகழ்ந்தது என்று கூறினால் வாசகர்களுக்கு ஆச்சரியமாக இருக்கும். ஆனால் அதுதான் உண்மை. முதலூரில் ஆரம்ப சுகாதார நிலையம் வந்ததே 1966-ல் தான். அதற்கும் முன்னால் நமது கிராமத்தில் பாரம்பரிய நாட்டு வைத்தியத்தில் கைதேர்ந்த பொது மருத்துவர்களும், மகப்பேறு, குழந்தை நலம் மற்றும் தோல் சம்பந்தமான சிறப்பு மருத்துவர்களும் சிறப்பாக சேவையாற்றி கிராமத்திற்கு பெருமை சேர்த்தார்கள். அவர்களைப்பற்றி இந்த இதழில் பார்ப்போம்.

பொது மருத்துவத்தில் நல்ல அனுபவம் உள்ளவர் பச்சஇலை வைத்தியர் என்று அழைக்கப்பட்ட ஏசுவடியான் நாடார். இவர் பாக்கியம் முக்கந்தரின் பேரன். 19-ம் நூற்றாண்டின் இறுதியில் பிறந்து இயற்கை வைத்திய முறையை தானாகவே கற்று எல்லா வகையான வியாதிகளுக்கும் மருந்து கொடுப்பார். கை நாடியைப் பார்த்து துல்லியமாக என்ன வியாதி என்றும் வியாதியின் வீரியம் என்ன என்றும் கணக்கிடுவார். அவர் கொடுக்கும் மருந்துகள் எல்லாமே செடிகளின் இலையிலிருந்தும் அவற்றின் வேர்களிலிருந்தும் தயாரித்ததாக இருக்கும். எல்லா மருந்துகளையும் அவரே தனது வீட்டில் தயார் செய்வார். உள்ளூர் மக்களுக்கு மாத்திரமல்ல, வெளியூர்களிலிருந்தும் மக்கள் அவருடைய வீட்டிற்கு வந்து வைத்தியம் பார்த்து செல்வார்கள். வெளியூர்களுக்கும் சென்று வைத்தியம் பார்ப்பதுண்டு. காயாமொழி, திருச்செந்தூர், காயல் பட்டணம், படுக்கப்பத்து போன்ற வெளியூர்களுக்கு அடிக்கடி போவார். காயாமொழியில், ஆதித்தனார் குடும்பத்தின் குடும்ப வைத்தியராகவே செயல்பட்டார். அவ்வாறு நெடுந்தூரம் போக நேரிட்டால், அதிகாலை ஒன்று அல்லது இரண்டு மணிக்கு தோளில் மருந்து பெட்டியோடும், கையில் தற்காப்புக்காக ஒரு பிரம்போடும் புறப்பட்டு வேலையை முடித்துவிட்டு அன்று மதியமோ அல்லது மாலையோ திரும்பி விடுவார். உள்ளூர் மற்றும் வெளியூர் மக்களுக்கு மருத்துவ சேவை செய்து புகழ்பெற்ற பச்சைஇலை வைத்தியர் காலரா நோய்க்கு மருந்து கண்டுபிடிக்கவில்லை. 1953-ம் ஆண்டு கிராமத்தில் பரவிய அந்த நோய்க்கு அவரும் பலியானதுதான் கொடுமை. அவருடைய மறைவுக்குப்பின் அவருடைய முத்த மகன் தேவசகாயம் நாடார் தந்தையிடமிருந்து மருத்துவக்கலையை நன்கு கற்று தந்தையைப்போலவே உள்ளூரிலும், வெளியூர்களிலும் மருத்துவ சேவை புரிந்து பெயர் பெற்றார். இதற்கிடையில் ஆங்கில மருத்துவத்தை முறையாகக் கற்று வந்த மருத்துவர்களும் மருத்துவ வசதிகளும் பெருகவே, நாட்டு வைத்தியம் தேவசகாயம் வைத்தியரோடு நின்றுபோனது.

பொது மருத்துவத்துறையில் பச்சைஇலை வைத்தியர் சிறந்து விளங்கியது போல், குழந்தைகள் நலத்துறையில் மிகப்பிரபலமாக விளங்கியது கொங்கந்தோனி நாடார் குடும்பம். கொங்கந்தோனி நாடார் 19-ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அவருடைய மகன் மரிய அந்தோணி நாடார் 20-ம் நூற்றாண்டில் துவக்கத்தில் வாழ்ந்து மரித்தவர். இவருக்கு இரண்டு மகன்கள். ஒருவர் ஏசுவடியான் நாடார். இன்னொருவர் அந்தோணிமுத்து நாடார். ஏசுவடியான் நாடாருடைய மகன் தாவீது நாடார், அவருடைய மகன் ஜேசுபாலன். ஜேசுபாலனுடைய வாரிசுகளில் ஒன்று கல்யாணி என்ற பெண்மணி. மேற்சொன்ன அனைவருமே குழந்தை வைத்தியர்களாக பெயர் பெற்றவர்கள். இவர்களில் இன்று மரிய ஜெபமாலை மற்றும் கல்யாணி மட்டும் குழந்தை மருத்துவ துறையில் பணி செய்து வருகின்றனர். இவர்கள் நோயாளிகளை கையாளும் முறையே அலாதி. குழந்தை பிறந்த 6 மாதங்களுக்குள் வருகிற வியாதிகளின் அறிகுறிகளை ஆராய்ந்து வியாதியின் தன்மையை கணக்கிடுகிறார்கள். வியாதியை குணப்படுத்த இவர்கள் கையாளும் முறைகளில் முக்கியமானது பார்வை என்று அழைக்கப்படும் மந்திரம். பார்வை பார்ப்பதோடு குழந்தைக்கு மருந்தும் கொடுக்கிறார்கள். மருந்து ஒரு வகை செடியின் வேரிலிருந்து இவர்களே தயார் செய்கிறார்கள். இந்த மருந்து வகைகளையும் பார்வை பார்க்கும்போது உச்சரிக்கும் மந்திரத்தையும் தங்கள் முன்னோர்களிடமிருந்து கற்றுக் கொண்டதாக கூறுகிறார்கள்.

மேற்சொன்ன சிறுபிள்ளை வைத்திய குடும்பம் இந்த சுற்று வட்டாரத்தில் அன்றிலிருந்து இன்றும் மிக பிரபலமான குடும்பம். கடந்த நூற்றாண்டின் நடுவில், அதாவது 1930-50களில் குழந்தைகள் நல சிறப்பு மருத்துவர்கள் இல்லாத காரணத்தால் வெளியூர்களிலிருந்து சிகிச்சைக்காக வரும் குழந்தைகளின் எண்ணிக்கை கணிசமாக இருந்தது. வடக்கே ஆறுமுகநேரி, காயல்பட்டணம் தெற்கே நாகர்கோவில் போன்ற ஊர்களிலிருந்தும் குழந்தைகளை எடுத்துக் கொண்டு சிகிச்சைக்காக வருவதுண்டு. இப்படி வருபவர்கள் ஒரு வாரம், 10 நாட்கள் என இங்கே தங்கி சிகிச்சை பெறுவதற்கு வசதியாக ஒரு கொட்டகையை கட்டி அங்கே சமையல் செய்யும் வசதியும் செய்து கொடுத்துள்ளார்கள். சில சமயங்களில் 10 குழந்தைகளும் அவர்களது பெற்றோர்களும் இருந்து சிகிச்சை பெற்றதாகக் கூறுகிறார் இன்றைய சிறுபிள்ளை வைத்தியர் மரிய ஜெபமாலை. இவர்களுக்குள்ளே போட்டியும் நிலவுவதுண்டு. ஆனால் சிகிச்சை பெற வருபவர்கள் ஏற்கனவே கிராமத்தில் உள்ள வைத்தியர்களைப் பற்றி தெரிந்து வைத்திருப்பதால் இந்த போட்டிகள் ஒரு அளவோடு இருந்து வந்துள்ளது.

பாக்கியம் முக்கந்தரின் இன்னொரு பேரனான அ. ஏசுவடியான் நாடாரும் அவரது துணைவி செல்வம் அம்மாளும் உடம்பில் வரும் பரு, மற்றும் கட்டிகள் போன்ற வியாதிகளுக்கு சிகிச்சை அளிக்கும் சிறப்பு மருத்துவர்களாக திகழ்ந்தனர். வேறு வியாதிகளுக்கு இவர்கள் சிகிச்சை அளித்ததில்லை. கட்டி வந்த இடத்தில் மருந்து போட்டு கட்டியை உடைக்கச் செய்து உள்ளே உள்ள சீலை வெளியேற்றுவது இவர்களது சிகிச்சை முறை. மந்திரம் சொல்லி பார்வை பார்ப்பதும் உண்டு. காலை வேளையில் இவர்கள் வீட்டு முன்னால் வெளியூர் ஜனங்கள் சிகிச்சைக்காக காத்திருப்பதை எப்போதும் பார்க்கலாம். வெளியூர்களில் மிகவும் பிரபலமாக இருந்தவர்கள். ஏசுவடியான் நாடார் 1956லும், செல்வம் அம்மாள் 1974லிலும் இறந்து போனார்கள். அவர்களுடைய மறைவுக்குப்பின் அவர்களுடைய பிள்ளைகள் யாரும் இந்த தொழிலை தொடரவில்லை.

பெண்களுக்கு மகப்பேறு காலத்தில்சு கப்பிரசவம் ஏற்பட சிகிச்சை

அளித்த பெண்மணி கிடாவெட்டி என்று அழைக்கப்பட்ட அந்தோணி முத்துஅம்மாள். இவர்கள் நிலமக்காரார் குடும்பத்தில்வாழ்க்கைப்பட்டவர். பள்ளிக்குச் சென்று படித்ததில்லை. செவிலியர், துணைச் செவிலியர் பயிற்சியும் முறையாக பெற்றதில்லை.ஆனால் செவிலியர்களுக்கும் துணை நிலை செவிலியர்களுக்கும் பாடம் சொல்லிக்கொடுக்கும் அளவுக்கு அனுபவமும் ஆற்றலும் பெற்றவர். ஏறக்குறைய 25-30 ஆண்டுகள் (1940 முதல் 1972 வரை) நமது கிராமத்தில் பிறந்த எல்லா குழந்தைகளுக்கும் பிரசவம் பார்த்தது இந்த பெண்மணியாகத்தான் இருக்கும். அருகில் மருத்துவமனை இல்லாத அந்த காலகட்டத்தில் மகப்பேறு துறையில் கிராமத்தில் பணியாற்றிய ஒரே துணை மருத்துவர் இந்தப் பெண்மணிதான். இவருடைய சிறப்புகுணம் என்னவென்றால் யார் அழைத்தாலும் எந்த நேரத்தில் அழைத்தாலும் தயங்காமல் போவார். எவ்வளவு நேரம் ஆனாலும் பிரசவம் ஆகும் வரை அங்கேயே இருந்து பார்த்துக் கொள்வார். இவருடைய கவனிப்பையும் மீறி பிரசவத்தின்போது தாயும், குழந்தையும் இறந்துபோன சம்பவங்களும் உண்டு. ஆனால் அவை இவருடைய சக்திக்கும், அன்றைய வசதிக்கும் அப்பாற்பட்டவையாக கருதப்பட்டன. அவர் 1972-ம் ஆண்டு காலமானார். அவருடைய மறைவுக்குப்பின் அவருடைய பெண்மக்களில் ஒருவரான சந்தனமரியாள் என்பவர் தாயின் பணியைத் தொடர்ந்தார். அவரும் இன்று உயிருடன் இல்லை.

மேலே குறிப்பிட்ட மருத்துவர்கள் நாட்டு மருத்துவத்தில் சிறந்து விளங்கி கிராமத்துக்கு பெருமை சேர்த்தவர்கள். ஆங்கில மருத்துவபடிப்பை முறைப்படி கற்று பட்டம் பெற்று மருத்துவ சேவை புரிந்த ஒருவரும் உண்டு. அவர்தான் ஐயாகுட்டி நாடாரின் தம்பி டாக்டர் அந்தோணிதுரை. இவர் 1971-ல் திருநெல்வேலி அரசு மருத்துவ கல்லூரியில் மருத்துவ பட்டம் பெற்று ஆப்பிரிக்க நாட்டிற்குச் சென்று மருத்துவ சேவை புரிந்து இறுதியாக நாகர்கோவிலில் சொந்த மருத்துவமனை நடத்தி வந்தார். நமது கிராமத்திலிருந்து நாகர்கோவில் செல்லும் அனைவரும் தங்களுடைய உடல் ஆரோக்கியத்தைப் பற்றிகலந்துபேசி சிகிச்சையும், ஆலோசனையும் மிகக்குறைந்த செலவில் பெற்று வந்தனர். எல்லோருக்கும் உதவ வேண்டும் என்ற நற்குணம் கொண்டவர் டாக்டர் அந்தோணிதுரை. பிரகாசமான ஒரு எதிர்காலத்தை நோக்கி சென்று கொண்டு இருந்த அவரை 2012-ம்ஆண்டு காலன் ஒரு சாலை விபத்தில் பலி கொண்டுவிட்டான்.

நான் ஆரம்ப கட்டுரையில் எழுதியிருந்ததுபோல, எனது கிராமம் சிற்றூராக இருந்தாலும், அங்கு சாதனையாளர்கள் பலர் வாழந்து சிறப்பு சேர்த்தார்கள். அதற்கு இந்த மருத்துவர்களே சான்று.

# சிந்தனைக்கு....

1. நல்ல எண்ணமும் நல்ல சிந்தனையும் கொண்ட சான்றோர்கள் எத்தனை காலம் வாழ்ந்தாலும். அவர்களை எந்த வித துன்பமும் அணுகாது. இந்த வையகத்தில் இன்புற்று வாழ்வார்கள்.
2. தினமும் ஒரு நேரமாவது இறைநாமத்தை கேட்டாலோ, அல்லது படித்தாலோ உன்னுடைய பாவங்கள் மற்றும் முன் ஜென்ம வினைகள் அனைத்தும் அகன்று விடும்.
3. பொறாமை, பேராசை, கோபம், கடுஞ்சொல் இவை நான்கும் உன் விரோதிகள்.
4. நேரம் என்பது செலுத்தப்பட்ட அம்பைப் போன்றது அது திரும்பி வராது.

M.ஆகாஷ் துரை, வெள்ளக்கோயில்

# இறை சித்தம்



தி.பா.121-4 இஸ்ராயேலின் கடவுள் கண் அயர்வதுமில்லை. உறங்குவதுமில்லை. நாம் இரவில் தூங்குவதும் காலை எழுவதும் இறைவனின் சித்தம். ஆகவே நிகழ் காலத்தை நல்லமுறையில் பயன்படுத்தி வாழ்வதே சரியானது. அதற்கு நல்ல சமாரியனைப் போல பிறர் நலம் காத்து வாழ வேண்டும் என்பதே இறை சித்தம். நாம் விரும்புகிறவற்றிலிருந்து பிறருக்காக செலவு செய்யாத வரை நன்மையை இறைவனிடமிருந்து பெற்றுக் கொள்ளமுடியாது. அதேபோன்று இறைவன் கொடுத்ததைக் கொண்டு திருப்தி அடையாமல் இன்னும் அதிகம் வேண்டும் என்றபேராசையே மனிதனுக்குத் துன்பம் தரும். உடலைவிட்டு உயிர் பிரியும் வரை பேராசையால் செல்வத்தைத் தேடுவது மன நிம்மதியையும், தூக்கத்தையும் கெடுத்து இறைவனை விட்டு நம்மைப் பிரித்து விடும்.

தொ.நூ.4-4. ஆதாமின் புதல்வர் இருவருள், இறைவன் காயினின் காணிக்கையை வெறுத்து ஆபேலின் காணிக்கையைத் தான் விரும்பினர். காரணம் இறைவனை அன்பு செய்து இறைச் சித்தப்படி வாழ்ந்தான்.உரோ-8-35 கிறிஸ்துவின் அன்பினின்று நம்மைப் பிரிக்கக் கூடியது எது? வேதனையா, நெருக்கடியா? இன்னலா?, பட்டினியா? இடரலா? சாவா. எதுதான் நம்மைப் பிரிக்க முடியும்? என வாழ்ந்து காட்டிய புனித பவுல் நல்ல தொரு ஓட்டத்தை ஓடிமுடித்தேன் நிலை வாழ்வைப் பெற்றுக் கொண்டேன் என எழுதுகிறார். நாமும் நிலை வாழ்வு அடைய வேண்டுமென்றால் மறுவாழ்வு உண்டுஎன்ற நம்பிக்கையின் அடிப்படையில் இறைச்சித்தப்படி வாழ வேண்டும். மனிதனின் முதுமையிலும் 2 வியங்கள் நமக்கு இளமையாகவே உள்ளன.1. உலக செல்வத்தின் மீதுள்ள ஆசை. 2. நீண்ட நாள் வாழ வேண்டும் என்ற ஆசை. வாழ்வும், வளமும் தனக்கு மட்டும்தான் சொந்தம் என கருதாமல், அனைவரும் அதனை அனுபவிக்க வேண்டும் என செயல்படுவது தான் மனிதனின் சிறந்த பண்பாகும். இத்தகையோர் இன்பத்திலும், துன்பத்திலும், பிறரன்புசெய்வார்கள், மன்னிப்பார்கள். கோபத்தை விட்டுவிடுவார்கள். இப்பேர்பட்டவர்களை இறைவனும் தன் அருள் வரங்களால் நிரப்பிடுவார்.

இறை சித்தம் என்றால் என்ன? நாம் ஆசைப்பட்டதை அடைய இறைவனை மன்றாடுவதா? இல்லை.இறைவனுக்கு சித்தமானதை அறிந்து அதன்படி வாழ்வது தான். சாதாரணமாக நாம் பொய் பேசாமல் இருப்பது, ஜெபம் செய்வது பெரிய பக்தி என நாம் கருதிவிட முடியாது. ஆனால் பொய் சொன்னால் தான் தப்பமுடியும் என்ற இடத்தில் கூட உண்மை பேசுவதுதான் பக்தியின் வைராக்கியம். சிந்திப்போம்! நாம் எந்த நிலையில் இருக்கின்றோம்? பணம், பதவி, அந்தஸ்து, செல்வம் போன்ற பேராசைகள் இறை நீதிக்கு உட்பட்டவை அல்ல. ஆனால் பெருமை காட்டாமல், தாழ்ச்சியோடு, சிறியவர்களிடமும் கூட அன்பு காட்டுவது இறை நீதி என்றும், இறை பக்திக்கான நோக்கம் என்றும் வேதாகமம்

கூறுகின்றது. ஒருவன் பணக்காரனாக இருந்தாலும், பிச்சைக்காரனாக இருந்தாலும், இறைநீதியின் நற்குணங்களைப் பெற்றிருந்தால் மட்டுமே இறைபக்தியில் நீடிக்க முடியும்.உதாரணமாக யோபு 42-6. யோபுவைப்போல என்னதான் சோதனைகள், இழப்புகள் வந்தாலும் பக்தி வைராக்கியத்தோடு வாழ்ந்தால் இறைச்சித்தத்தை அடைய முடியும்.

1 சாமு 2-17,22 ஏலியின் மகன்களான ஓப்னி, பினெகாஸ் இருவரும் கடவுளுக்குண்டான இறைச்சியின் மேல் ஆசை கொண்டார்கள். பெண்களை பாலியல் பலாத்காரம் செய்தார்கள். இறைவனின் கோபத்திற்கு ஆளானார்கள். சாமுவேல் மூலம் இறைவன் ஏலிக்கு வெளிப்படுத்தியும் அவர் 2 மகன்களையும் அடக்க முடியாமல் போனதால் இறைவன் நியாயத் தீர்ப்பு வழங்க நேரிட்டது. ஏலியை இறைவன் பாவி என குறிப்பிட்டார். ஏனெனில் ஏலி மகனை கண்டித்தார். அடக்கவில்லை. 2 வகை கண்டிப்புகள். 1. எச்சரிக்கை செய்வது. 2. அது நடக்காத பட்சத்தில் அந்த இடத்திலிருந்து அவர்களை அப்புறப்படுத்தி, புதிய வேறு நபர்களை நியமிப்பது. ஏலியிடம் அதிகாரம் இருந்தும், தன் மகன்களை அப்புறப்படுத்தி, வேறு நிர்வாகம் அமைக்காமல் விட்டுவிட்டதால் இறைவனின் கோபத்திற்கு உட்படுத்தப்பட்டார். இறைவன் நியாயத் தீர்ப்பினால் தன்குடும்பத்தை அழிக்கப் போகிறார் எனத் தெரிந்தும் இறைவன் மீது பக்தி வைராக்கியத்தோடு இறைசித்தப்படி வாழ்ந்து 98 வது வயதில் கீழே விழுந்து மாண்டார். ஏலியின் இறை பக்தி வைராக்கிய வாழ்க்கை நமக்கு எடுத்துக்காட்டு.

அதே போன்றுதான் நம் அன்புத்தாய் திருக்கல்யாணமாதாவும், உமது வார்த்தையின்படியே எனக்கு ஆகக்கடவதுஎன்ற பக்தி வைராக்கியத்தோடு, எத்தனை இன்னல்கள், சோதனைகள், வேதனைகள் துன்ப துயரங்கள் வந்தாலும், தன் வாழ்க்கையை இறைவனுக்கு மட்டுமே அர்ப்பணித்து பக்தி வைராக்கியத்தோடு வாழ்ந்து காட்டினார். நமக்காக விண்ணில்இறைவனிடம் பரிந்து ஜெபிக்கிறார். இதை உணர்ந்து இறைச்சித்தப்படி வாழ்ந்தால் நாமும் விண்ணக வாழ்வை அடைய முடியும்.

Y.V.ராஜ்,சென்னை

# ஆறு அதிசயங்கள்

☆ சராசரியாக 6 விநாடிகளுக்கு ஒருமுறை நாம் கண்களை இமைக்கிறோம்.
☆ ரத்தம் தண்ணீரைவிட 6 மடங்கு கணமானது.
☆ வாலிபால் விளையாட்டில் ஓர் அணியில் 6 பேர் இடம் பெற்றிருப்பர்.
☆ யானைக்கு பற்கள் 6 முறை விழுந்து முளைக்கும்.
☆ யானையின் காலடித் தடத்தின் குறுக்களவு 6-ஆல் பெருக்கினால் அந்த
☆ யானையின் உயரம் தெரிந்து விடும்.
☆ புளூட்டோ கோளிலிருந்து புறப்படும் ஒளி பூமியை அடைய 6 மணி நேரமாகும்.
☆ நயாகார நீர்வீழ்ச்சியில் நிமிடத்துக்கு 6 மில்லியன் கனஅடி நீர் பாய்கிறது.
☆ மத்திய அமெரிக்க நாடுகளான ருவாண்டா,புருண்டியலில் உள்ளவர்கள்தான்
☆ உலகின் மிக உயரமான மனிதர்கள். இவர்களின் சராசரி உயரமே 6 அடி இருக்கும்.

**-டெ. மனோ,** வெள்ளக்கோவில்.

# மாதாவின் ஏழுவியாகுலங்கள்

i. **முன்னூறு மயில் எகிப்திற்கு நடைபயணம்** அந்த நாளில் எந்த ஒரு வாகன வசதியும் இல்லாத காலம். அதுவும் அவர்கள்போன இடம் ஒரு மலை பிரதேசம். அந்த வியாகுலதாய் ஒரு தியாக மனபான்மையோடு பிறருக்கு உதவி செய்ய வேண்டு மென்ற நல் எண்ணத்தோடு செல்கிறார்கள். அதுவும் போகும் வழியில், எங்கே தங்கினார்கள், எங்கே உணவு உண்டார், எப்படி நடந்தார்கள் என்ற நாம்சிந்தித்து கற்பனை பண்ணிபார்க்கும் போது அந்த தாய்க்கு அது ஒரு வியாகுலம்தானே ii.**சிமியோனின் வேதவாக்கு** உமது உள்ளத்தில் ஒரு வாழ் ஊடுருவும் என்று சொல்கிறார். சொன்னவர் சாதாரண ஆள் அல்ல,ஏசுவை நான் பார்க்கும் முன் நான் சாகமாட்டேன் என்று ஓர் நம்பிக்கையோடு இருந்தவர். அதேபோல் அவர் ஏசுவை கண்டு கொண்டார். அப்படி என்றால் அவர்வரம் பெற்றவர்தானே. அப்படி ஆனால் அவர் சொல் பலிக்கத்தானே செய்யும், அதை நினைத்து நம் வியாகுல அன்னை என்ன நடக்குமோ என்று வேதனை அடைந்திருப்பார்கள். நம் தாய்க்கு அதுஒரு வியாகுலம் தானே iii.**பன்னிரெண்டு வயது சிறுவனை தேடுதல்** இப்போது நிறைய குடும்பங்களில் உள்ள பிள்ளைகள் திருவிழா கூட்டங்களிலும்,பஸ்நிலையங்களிலும், பொதுகூட்டங்களிலும், தங்களுடைய பிள்ளைகளை தவறவிட்டுவிட்டு கண்ணீரோடு துடித்துகொண்டு ஊர்மக்களிடம் வந்துசொல்லி கதறுவதை நம் பார்க்கிறோம், அது போல்தானே அலைந்து எப்படி எல்லாமோ துடித்திருப்பார்கள். நம் தாய்க்கு அது ஒரு வியாகுலம் தானே! iV.**கல்வாரி பயணம்**அன்று அரசாங்க சட்டப்படி இயேசுநாதரை குற்றவாளி என்று கூறி சிலுவையை சுமக்கவைத்து, அதிகாரத்தில் உள்ளவர்கள் ரத்தம்சிந்த கசையால் அடித்து கல்வெளிமலையில் நடைபயணமாக கொண்டு வருகிறார்கள். அவருடன் இருந்த சீடர்கள் ஒருவரையும் காணவில்லை. தாய் பாசம் பின் தொடர்ந்து வருகிறது. அதிகாரிகளிடம் ஏன் என்று கேட்கமுடியாது. அதே போல் தான் அன்று நம்வியாகுல அன்னையின் அவர்கள் வாய்விட்டு கதறமுடியாமல் துன்பப்பட்டார்கள் துடித்தார்கள், துயரம் அடைந்தார்கள். சொல்லொண்ண வேதனைக்கு உட்பட்டார்கள். நம் தாய்க்கு அது ஒரு வியாகுலம் தானே V. **தனது மகனின் உயிர்பிரியும்** போது எந்த ஒரு தாயும், தன்பிள்ளைகள் உயிர் பிரிவதை நினைத்துகூட பார்க்கமாட்டார்கள். இதோ நம் வியாகுல அன்னைக்கு வந்திருக்கும் நிலைமையை பார்த்தீர்களா? தன் கண்முன்னாலே தன் மகனின் உயிர் பிரிகிறது.இப்போதும் நம்நாட்டிலும் சில இடங்களில் தன்பிள்ளைகளின் பிரிவு தாங்காமல் பிள்ளைகளின் ஏக்கத்தால் உயிர்பிரிகிறவர்களும் உண்டு. நம் வியாகுல அன்னை, தன் மகன் இதோ உன்தாய். இதோ உன்மகன்என்று சொன்ன வாக்கை காப்பாற்ற தன்னை நமக்காக தியாகம் செய்து உயிர் வாழ்கிறார்கள், நம்தாய்க்கு இதுவும் ஒரு வியாகுலம் தானே?

Vi.**சிலுவையில் இருந்து தனது மடியில் சுமக்கும்போது....**


அன்புள்ளம் கொண்டவர்களே ஒரு பெண்ணுக்குதிருமணம் முடிந்த கொஞ்ச நாளில் அவள் தாய்மை அடைந்தால் அவளுடைய மகிழ்ச்சிக்கு எல்லையே கிடையாது. அதே போல் இரு குடும்பத்தாரும் நமக்கு ஒரு வாரிசு வரப்போகிறது என்று பெருமை கொள்வார்கள். அதேபோல் அவள் எவ்வளவோ

வேதனை அடைந்து குழந்தையை பெற்றெடுக்கிறாள். பெற்றெடுத்தலில் அவள் அடைந்த வேதனை எப்படி போனது என்று அவளுக்கே தெரியாது. ஏனென்றால் அவ்வளவு ஆனந்தம் அடைகிறாள். இதோ நம் வியாகுல அன்னையை பாருங்கள். பத்து மாதம் தம் வயிற்றில் சுமந்து பெற்றெடுத்து பாலூட்டி சீராட்டி, மடியில் போட்டு கொஞ்சி சீராட்டி வளர்த்த தம் மகன் இப்போது உயிரற்ற நிலையில் தன் கண்முன்னே மடியில் சுமந்து கொண்டிருக்கிறார். எந்த தாய்க்கும் இந்த துன்பம் நேரிடலாமோ? அதை நம் வியாகுல அன்னை தாங்கி கொள்கிறார். அவர்கள் மனம் எப்படி எல்லாம் சுக்குநூறாக நொறுங்கி கொண்டிருக்கும். இதுவும் நம்தாய்க்குஒரு வியாகுலம் தானே

vii.**கல்லறையில் கிடத்தும் போது....**

நம்கிராமங்களில் பாருங்கள். ஒருஆள் இறந்துவிட்டால் உற்றார், உறவினர்,நண்பர்கள்அனைவரும் வந்து துக்கத்தில் கலந்து கொள்வார்கள். பிறகு அந்த உடலை கல்லறைக்கு தூக்கும் போது பெண்கள் அனைவரும் பயங்கரமாக ஓ என்று கதறுவார்கள், ஏனென்றால் நாம் பார்த்த முகத்தை இனிமேல் பார்க்க முடியாத என்றஉணர்வு அதேபோல் தான் நம் வியாகுல அன்னையும், கல்லறையில் இருக்கும் அவருடைய முகத்தை வெள்ளை துணியால் மூடும் போது இதுவரை பார்த்துகொண்டிருந்த தன் மகனின் முகத்தை இனி பார்க்க முடியாதே என்ற நினைத்திருக்கும் போது அவருடைய உயிரே பிரிந்தது போல் இருந்திருக்கும் இது நம்தாய்க்கு தாங்கமுடியாத ஒரு வியாகுலம் தானே!

Y.**இருதயராஜ்**,பொற்பை



**8 ம் பக்கம் விடை**

**மொத்தம் 420 முட்டைகள்**

## என் இனிய அன்னையின் பிள்ளைகளே!

கோவில் மணி ஓசை
விடியலுக்காக அல்ல!
வழிபாடுகள் ஆலயங்கள்
பொழுதுபோக்கு அல்ல!
விதை நீங்கி செடி வளர்ப்பது
அழகுக்காக அல்ல!
நிலத்தைப் பண்படுத்தி,வேலி அமைப்பது
விற்பனைக்காக அல்ல!
படகு, வலைகள் வாங்கி, காத்திருப்பது
கடலை இரசிக்க அல்ல!
செங்கல், மணல் சேகரித்து, அஸ்திவாரம் போடுவது
சேமிப்புக்காக அல்ல!
முடியாது என்பதும் விடியாது என்பதும்
முடமான வார்த்தைகள்
நாம் திருக்கல்யாண அன்னையின் தோட்டத்துப்
பூக்கள்
நாளும் மலர்ந்து நறுமணம் பரப்பி வாழ்வோம்!



**-எம்.ஸ்டீபன் ராஜ்**
(த.ஆ. பணிநிறைவு) பொற்பை.

## கடந்த மாத கேள்வி-பதில் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்


| | |
|---|---|
| **D.**ஜோஸ்பின் மேரி தாசன் | கவரப்பேட்டை |
| **W.** பெமிலா வில்சன் | கவரப்பேட்டை |
| **M.** அனிதா ஜான்சன் | கவரப்பேட்டை |
| **U.**பெனிட்டா டோமினிக் | கவரப்பேட்டை |
| **S.**கீதா சுரேஷ் | கவரப்பேட்டை |
| **A.** அன்ன புஷ்பம் ராஜன் | கவரப்பேட்டை |
| **T.** சுகிர்தமணி அன்பரசன் | கவரப்பேட்டை |
| **A.** ஜோஸ்பின் அபிஷியா | கவரப்பேட்டை |
| **A.** ஜோசப் அரிஸ்டாட்டில் | கவரப்பேட்டை |
| **U.** எல்ஸி தினேஷ் | கவரப்பேட்டை |
| **U.**இமாகுலேட்சியோனா | கவரப்பேட்டை |
| **U.**ஆண்டனி அருண்ஜோசப் | கவரப்பேட்டை |
| **A.**அனுஷா அகஸ்டின் | கவரப்பேட்டை |
| **D.**கலா சகாயம் | கவரப்பேட்டை |
| **S.**ரீட்டா யோவான் | கவரப்பேட்டை |
| **A.**பாக்கியலெட்சுமி ஆறுமுகம் | கவரப்பேட்டை |
| W.கெவின் ரென்சி | கவரப்பேட்டை |
| லூர்து மேரி தேவசகாயம் | பிரகாசபுரம் |
| **S.**மலர்விழி செல்வகுமார் | தி.க. குன்றம் |
| சு.பவித்ரா | ரெடில்ஸ் |
| ப.ரூபா | ரெடில்ஸ் |
| **A.** ஜான்ஸி சேகர் | பொற்பை |
| **G.** ரெஜினாள் மேரி | பொற்பை |
| **S.**மேரி லீலா | பொற்பை |
| **A.** நர்மதா ஜோஸ் | தோப்புவிளை |
| கபிரியேஸ் மேரி | பொற்பை |
| குயின் ரோஸ் பாக்கியம் | பொற்பை |
| தொ. மிக்கேல்ராஜ் கலா | மணப்பாடு |
| **P.** சந்தணதிரவியம் | பொற்பை |
| **M.**டேவிட்தேவராஜன் | வெள்ளகோவில் |
| **S.**நிர்மலா சந்தியாகுராஜன் | மார்க்கம்பட்டி |
| S.சிலுவை அந்தோணி | பொற்பை |
| **A.**பாத்திமா மேரி | கொழுந்தட்டு |
| **D.**ஜாக்கலின் டென்சன் | வெள்ளகோவில் |
| யூஜின் கெவின் | வீ.பா.பட்டணம் |
| **J.**பீட்டர் ஜோசப் | சென்னை |
| **P.**ஸ்டெல்லாபீட்டர் | மாதர்பாக்கம் |
| **J.**புனிதா ஜெயக்குமார் | பொற்பை |
| **G.**ஜான் ஷீலா | ஏர்வாடி |
| S. ஜோஸ்லின் | பொற்பை |
| B.சிறிய புஷ்பம் | பொற்பை |
| S.பெலிக்ஸ் ஓயிட் | சென்னை |
| .E.அகஸ்டா | பொற்பை |
| ரா.சந்தியா | ரெடில்ஸ் |
| D.அந்தோணி ஏசுதாசன் | பொற்பை |
| P.புஷ்பமணி இராஜேந்திரன் | நெடுங்குளம் |
| E. சகாய டொமினிக் | பொற்பை |
| G. மேரி சரோஜா | சென்னை |
| பிரின்ஸ் ஜேம்ஸ் | பொற்பை |
| ம. மேகலா மோனிகா | பொற்பை |
| I.அந்தோணி முத்து | அழகப்பபுரம் |
| M. ஆகாஷ்துரை | வெள்ளக்கோவில் |
| A. ஷோபியா | ஏர்வாடி |
| M. ஜெப ஆஷா | |
| J. சுதா ராஜா | திருவான்மியூர் |

## கடந்த மாத விவிலிய விடைகள்

1. பெட்சவேல்
2. ஒன்றை ஒன்று
3. பொன்னால்
4. ஐம்பது
5. இத்தாமரின்
6. இரண்டாயிரத்து எண்ணுற்று இருபத்து ஐந்து
7. நீல
8. ஆண்டவருக்கு அர்ப்பணம்
9. தண்ணீர் தொட்டி
10. ஆண்டவரின் மேகம்
11. காட்டுப்புறாக்களை யாவது மாடப்புறாக்களை யாவது
12. ஆரோனுக்கும் அவன் புதல்வருக்கும்
13. உப்பு
14. கொழுப்புஇரத்தம்
15. குரு
16. ஆண்டவருக்கு
17. பத்தில்
18. காலைவரை
19. தூயவனாய்
20. சினாய்ப் பாலை நிலத்தில்

# வாழ்வு தரும் வார்த்தைகள் – பிப்ரவரி 2015

| தேதி | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|
| 1. | ஆண்டின் ஞாயிறு புனித பிரிஜிட் | இச.18:15-20, | |
| | | 1கொரி.7:32-35 | மாற்.1:21-28 |
| 2. | ஆண்டவரை ஒப்புக்கொடுத்தல் | மலா 3:1-4 எபி.2:14-18 | லூக்.2:22-40 |
| 3. | புனித ப்ளேஸ் | எபி.12:1-4 | மாற்.5:21-43 |
| 4. | புனித அருளானந்தர் | எபி.12:4,7,11-15 | மாற்.6:1:6 |
| 5. | புனித அகதா | எபி.12:18,19,21-24 | மாற்.6:7-13 |
| 6. | புனித பால்மீக்கி | எபி.13:1-8 | மாற்.6:14-29 |
| 7. | புனித ஜெரோம் எமிலானி | எபி.13:15,17,20-21 | மாற்.6:30-34 |
| 8. | ஆண்டின் ஞாயிறு பாலர் சபை நாள் | யோபு 7:1-4,6-7, | |
| | | 1 கொரி.9;16-19,22-23 | மாற்.1:29-39 |
| 9. | | தொ.நூ1:1-19 | மாற்.6:53-56 |
| 10. | புனித கொலஸ்திகா | தொ.நூ1:20-24 | மாற்.7:1-13 |
| 11. | லூர்து அன்னை | தொ.நூ2:4-9,15-17 | மாற். 7:14-23 |
| 12. | புனித மெலடியஸ் | தொ.நூ 2:18-25 | மாற்கு 4:24-30 |
| 13. | | தொ.நூ 2:1-8 | மாற்.7:31-37 |
| 14. | புனிதர்கள் சிரில், மெத்தோடியஸ் | தொ.நூ 3:19-24 | மாற்8;1-10 |
| 15. | ஆண்டின் ஞாயிறு புனிதர்கள் பாஸ்டினஸ்,ஜோவிட்டா | லேவி 13:1-2,44-46 | |
| | | 1 கொரி10:31-11:1 | மாற்.1:40-45 |
| 16. | | தொ.நூ 4:1-15,25 | மாற் 8:11-13 |
| 17. | | தொ.நூ 6:5-8,7:1-5,10 | மாற்8:14-21 |
| 18. | சாம்பல் புதன் | யோவே 2:12-18 2கொரி. 5:20-6:2 | மத். 6:1-6-18 |
| 19. | | இச.30:15-20 | லூக் 9:22-25 |
| 20. | | ஏசா. 58:1-9 | மத்.9:14-15 |
| 21. | புனித பீட்டர் தமியான் | எசா 58:9-14 | மாற். 5:27-32 |
| 22. | தவக்கால ஞாயிறு | தொ.நூ 9:8-15, | |
| | | 1பேது 3:18-22 | மாற். 1:12-15 |
| 23. | புனித போலிகாப்பு | லேவி 19:1-2,11-18 | மத்.25:31-46 |
| 24. | புனித பெர்னதத் | ஏசா 55:10-11 | மத்.6:7-15 |
| 25. | | யோனா 3:1-10 | லூக். 11:29-32 |
| 26. | | சபை 12:14-16,23-25 | மத்7:7-12 |
| 27. | புனித கபிரியேல் | எசே18:21-28 | மத்.5:20-26 |
| 28. | புனித ஹிலாரியஸ் | இச. 26:16-19 | மத். 5:43-48 |



# திருவிவிலியம் நமது செல்வம்

## விவிலிய வினா – விடை போட்டி

**பதில்கள் தேடவேண்டிய பகுதி :** லேவியர் : அதிகாரம் 8 முதல் 27 வரை

1.மக்கள் கூட்டமைப்பு முழுவதையும் எங்கு கூட்டிவர ஆண்டவர் மோசேயிடம் கூறினார்?

2. ஆரோன் மக்களுக்கு நேராகத் தம் கைகளை உயர்த்தி அவர்களுக்கு என்ன வழங்கினார்?

3. ஆரோனின் சிற்றப்பன் யார்?

4. உங்கள் கடவுளாயிருக்குமாறு உங்களை எங்கிருந்து வெளிக்கொணர்ந்த –தாக ஆண்டவர் கூறுகிறார்.

5. ஆண் குழந்தைக்கு எத்தனையாவது நாளன்று விருத்தசேதனம் செய்யப்பட வேண்டும்?

6. தலை முடி உதிர்ந்து ஒருவன் மொட்டையானால் அவர்..........

7. ஆண்டவர் மோசேயிடமும் ஆரோனிடமும் உடைமையாக தான் வழங்கும் நாடாக எதைக் கூறினார்?

8.இரக்கத்தின் இருக்கையின் மேல் ஆண்டவர் எங்கு தோன்றுவார்?

9. குடிமக்களும் அந்நியரும் வேலை செய்யாமல் நோன்பிருக்க வேண்டிய நாள் எது?

10. குருதி எது போன்றது?

11. நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள்........... அஞ்சுங்கள்

12. நரை திரண்டவருக்கு முன்........... நில்.

13. என் கட்டளைகளைக் கைக் கொண்டு அவற்றின் படி...........

14. வேற்றினத்தார் எவரும் தூய பொருள்களை................ வேண்டாம்.

15. நானே உங்களைப் ................ ஆக்கும் ஆண்டவர்.

16. எத்தனை நாட்கள் புளிப்பற்ற அப்பங்களை உண்பீர்கள்?

17. கூடாரப் பெருவிழாஎத்தனை நாள்கள் தொடரும்?

18. குத்து விளக்கு எரிந்து கொண்டிருக்க எந்த எண்ணெய் கொண்டு வர வேண்டும்?

19. ஐம்பதாம் ஆண்டு உங்களுக்கு................. ஆண்டு.

20. மதிப்பீடுகள் அனைத்தும் எதன்படி கணக்கிட வேண்டும்.

**– P.ஆல்வின் அண்ணாமலை,**
தலைமை ஆசிரியர் (ஓய்வு).

**அடுத்த இதழ்**

தவக்காலநோன்பு, புனித சூசையப்பர்விழா,

சிறப்பிதழாக வெளிவர இருக்கிறது இது பற்றிய தங்களுடைய சிறப்பு கவிதை, அன்னை பற்றிய சிறப்பு கட்டுரை, மற்றும் படைப்புகள் வரவேற்கப்படுகின்றன. படைப்புகள் வந்து

**சேர வேண்டிய கடைசி நாள் : 15-02-2015**

சந்தாதாரராக ஆகுங்கள் ! அன்னையின் அருள் பெறுங்கள் !

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசிநாள் : 15.02.2015**

# திருத்தல வழிபாடுகள்

- ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் 10.00 மணி வரை குணமளிக்கும் ஜெப வழிபாடு. 10.00 மணி முதல் 11.00 மணி வரை மலையாள மொழியில் திருப்பலி 11.00 மணி முதல் 12.00 மணி வரை ஜெபமாலை ஜெபித்துக்கொண்டு ஆலயத்தைச் சுற்றி திருக்கல்யாண அன்னையின் சப்பரப்பவனி. 12.00 மணிக்கு நவநாள் திருப்பலி நடைபெறும். தொடர்ந்து அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்படும். மாலை 4.00மணிக்கும் திருப்பலி நடைபெறும்.மாலை 6.30 மணிக்கு எரியும் மெழுகுவர்த்தியை கரத்தில் ஏந்தி ஜெபமாலை ஜெபித்துக்கொண்டு தேரோட்ட வீதியில் திருக்கல்யாண அன்னையின் சிறிய சப்பரப் பவனி நடைபெறும். அதைத் தொடர்ந்து நவநாள் திருப்பலியும், நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கும் நடைபெறும்.
- மற்ற சனிக்கிழமைகளில் மாலை 6.30 மணிக்கு எரியும் மெழுகுவர்த்தியை கரத்தில் ஏந்தி ஜெபமாலை ஜெபித்துக்கொண்டு தேரோட்ட வீதியில் திருக்கல்யாண அன்னையின் சிறிய சப்பரப் பவனி நடைபெறும். அதைத் தொடர்ந்து நவநாள் திருப்பலியும், நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கும் நடைபெறும்.
- மாதத்தில் முதல் செவ்வாய் அந்தோணியார் கெபியில் மாலையில் திருப்பலி நடைபெறும்.
- மாதத்தில் முதல் புதன் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள லூர்துமாதா கெபியில் மாலையில் திருப்பலி நடைபெறும்.

  மாதத்தில் இரண்டாவது புதன் காலை திருத்தலத்தில் திருப்பலி, மாலை நான்கு சந்தி கெபியில் திருப்பலி நடைபெறும்.
- மாதத்தில் முதல் வெள்ளி நோயாளிகளை வீட்டில் சந்தித்து நற்கருணை வழங்குதல்
- மற்ற நாட்களில் காலை 6.00 மணிக்கு திருப்பலி நடைபெறும்.
- மாதத்தின் முதல் வெள்ளி மற்றும் எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் மாலையில் திவ்ய நற்கருணை ஆசீர்வாதம் நடைபெறும்.

**இணையூர் வழிபாடுகள்.**

**நவமுதலூர்**

- ஞாயிறுதோறும் ஊர் ஆலயத்தில் மாலை திருப்பலியும், வெள்ளி மாலை புனித மிக்கேல் அதிதூதர் கெபியில் திருப்பலியும் மற்றும் மக்களின் தேவைக்கேற்ப வார நாட்களில் திருப்பலியும் நடைபெறும்.

## திருக்கல்யாணத்தாய் திருத்தலப் பெருவிழா

| | | |
|---|---|---|
| ஜனவரி 14 – | மாலை 6.00 மணி | திருவிழா கொடியேற்றம் |
| ஜனவரி 21 – | மாலை 6.00 மணி | சிறப்பு நற்கருணை பவனி |
| ஜனவரி 22 – | மாலை 6.00 மணி | அன்னையின் அதிசயத் தேர்பவனி<br>சிறப்பு மாலை ஆராதனை |
| ஜனவரி 23 – | காலை 6.00 மணி | திருவிழா திருப்பலி |
| | மாலை 6.00 மணி | அன்னையின் அதிசய தேர்ப்பவனி<br>நற்கருணை ஆசீர் |


மெழுகுவர்த்தி ஏந்தி ஜெபமாலை ஜெபித்துக் கொண்டு
திருக்கல்யாண அன்னையின் சப்பரபவனி